# தமிழ்

## பொதுப் பாடத்திட்டம் – 2009

## முதல் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை

### முன்னுரை

ஓர் இனம் தன்னை இனமாக அடையாளப்படுத்திக் கொள்வதில் மொழி மிக முக்கிய இடம் வகிக்கிறது. ஒவ்வோர் இனத்தினுடைய வாழ்வின் செழுமையையும், பண்பாட்டுக் கூறுகளையும் மொழி தன் உள்ளீடாகக் கொண்டுள்ளது. மொழியின் ஊடாகவே, ஒவ்வொரு மனிதனும் தன் அடையாளத்தைத் தேடுகிறான். மொழியின் வழியாகவே சிந்திக்கிறான். மொழி அளவிடற்கரிய ஆற்றல் மிக்கது; உணர்வுகளின் துடிப்பாகவும், கருத்துப் பரிமாற்றத்தின் கருவியாகவும் திகழ்வது.

தமிழ் பழைமையும் புதுமையும் நிறைந்த மொழி; உயர்தனிச் செம்மொழியாகத் திகழ்வது. இத்தகு சிறப்பு வாய்ந்த தாய்மொழியாம் தமிழைக் குழந்தை தான் வாழும் சூழலில் பெற்றோர், உற்றார், உறவினர் பேசுவதன் வாயிலாகக் கேட்கிறது. கேட்ட செய்தியை உள்வாங்கிக்கொண்டு தானும் பேசத் தொடங்குகிறது; செயல்படத் தொடங்குகிறது. மொழிக்குள் உள்ளடங்கியுள்ள உணர்வுகளையும் புரிந்து கொள்கிறது.

இரண்டு, மூன்று வயதில் மொழியை நன்கு பேசிய, பயன்படுத்திய குழந்தை பள்ளிக்கு வந்த பின்பு பேசத்தயங்குகிறது. காரணம், வகுப்பறையில் குழந்தைகளைப் ‘பேசாதே! இங்கும் அங்கும் ஓடாதே!’ எனப் பேசுவதற்குத் தடைபோடுவதும் குழந்தைகளின் பேச்சுமொழியை, எண்ணத்தை, கருத்தை, சிறு சிறு தவறுகளை அப்படியே ஏற்றுக் கொள்ளாமையுமேயாகும். குழந்தைகள் மொழித்திறன் பெறவும், மொழி ஆளுமையில் வல்லமை பெறவும், வகுப்பறையானது குழந்தைகளின் விருப்பத்தை, தேவையை, எண்ணத்தை நிறைவு செய்வதாய் இருத்தல் வேண்டும். குழந்தைகள் கூடிப்பேசும் இடமாக வகுப்பறை மாறவேண்டும்.

குழந்தைகள் வீட்டில் பெறக்கூடிய அனுபவங்களைப் பள்ளிச்சூழலில் இணைத்துக் கற்பிக்க வேண்டும். ஏனெனில், வகுப்பறைகளில் மட்டும் கற்றல் நிகழ்வதில்லை. தெரிந்ததோடு தொடர்பு படுத்தும்போதே கற்றல் எளிதாகிறது. மேலும், குழந்தைகளுக்குப் பாதுகாப்புடன்கூடிய அச்சமற்ற சூழலை உருவாக்கிக் கொடுத்துக் குழந்தைகளின் ஆர்வத்தை அடிப்படையாக்கிக் கற்பித்தல் வேண்டும். மொழிப்பாடமே பிறபாடங்களுக்கு அடிப்படையாகும். மொழிக்குப் பின்னால் உள்ள உணர்வுகளைப் புரிந்து கொள்வதன் வாயிலாகப் பிற பாடங்களை எளிதில் புரிந்துகொள்ள இயலும்.

### தமிழ் கற்பித்தலின் நோக்கங்கள்

- குழந்தைகள் பள்ளிக்கு வரும்போதே அவரவர் வாழ்க்கைச் சூழலுக்குட்பட்டு ஏராளமான சொற்களை அறிந்து வைத்துள்ளனர். தமது தாய்மொழியில் வல்லமை, உச்சரிப்புத் திறன், வாக்கியங்களின் அமைப்பு பற்றிய அறிவுடன்தான் குழந்தைகள் பள்ளிக்கு வருகின்றனர். மொழியைப்பற்றிய அடிப்படைப்புரிதலும், உரிய இடங்களில் அதைச் சரியாகப் பயன்படுத்தும் திறமையும் அவர்களுக்கு உள்ளன. இத்தகைய தொடக்கநிலைத் திறன்களைப் படிப்படியாக ஒருங்கிணைத்து வளர்ப்பதே தாய்மொழிக்கல்வி கற்பித்தலின் முதற்படியாகும்.
- இந்த மொழிப்பயன்பாடு தாய்மொழிக்கல்வியைக் கற்பித்தலுடன் மட்டும் நிறைந்து போகிற ஒன்றன்று. பிற பாடங்களான அறிவியல், சமூக அறிவியல், கணக்கு உள்ளிட்டவற்றுடன்

இணைத்துக் கற்பிக்கப்படுதல் வேண்டும். மொழியறிவின்வழியே உண்டாக்கப்படும் தேடல், பண்பாட்டுப் பரிமாற்றங்களுக்கான வேர்களைக் கண்டடையும் ஊக்கத்தைத் தருதல் வேண்டும்.

- தமிழ், தமிழர் வாழ்வியல், பண்பாட்டியல் சார்ந்த கருத்துகளை மொழிப்பாடத்தின் மையமாக அமைத்தல்.
- மதச்சார்பற்ற தன்மையுடன் பாடப்பொருள்களும் , பாடப்புத்தகமும் வடிவமைக்கப்படுதல்.
- தமிழர்தம் வாழ்வுடன் பிறமொழி பேசும் மக்களின் வாழ்க்கை நிகழ்வுகள் குறித்த அறிமுகம் மொழிப்பாடத்தில் அமைந்திருத்தல்.
- பாடப்பொருள், அறிவியற் கண்ணோட்டத்தில் உருவாக்கப்படுதல்.
- பயிற்சிஏடுகளின் வாயிலாகத் தானே கற்றல் திறனை மேம்படுத்திக் கொள்வதற்கான வழிமுறை, தமிழ்ப்பாடத்தில் செய்யப்பட்டிருத்தல்.
- மொழிப்பயிற்சிகளைக் கணினிவாயிலாகக் கற்பதற்கான வாய்ப்புகளுடன் பாடப்பொருள் அமைந்திருத்தல்.
- மாற்றுத்திறன் படைத்தோரின் சாதனைகளை வெளிக்கொணருதல்.
- தமிழில் தற்காலத் தொல்பொருள் அகழ்வாராய்ச்சி, பண்டைய நாணயங்கள்பற்றிய ஆய்வுகளின் அறிமுகம் பாடப்பொருளில் இடம்பெறுதல்.
- தமிழகத்தில் பெண் விடுதலை, மகளிர் முன்னேற்ற இயக்கங்களில் பங்கெடுத்த, தலைமையேற்ற பெண்கள்பற்றிய வாழ்க்கைக் குறிப்புகளை அறிமுகம் செய்தல்.
- தேர்வுமுறை சார்ந்தும், செய்திகளை மையப்படுத்துவதோடு மட்டுமன்றி பெற்ற மொழியறிவை நடைமுறை வாழ்க்கையுடன் தொடர்புபடுத்திக் கூர்மையாக்கும் திறனை வளர்த்தல்.
- குழந்தைகளின் தொடக்கநிலை மொழிப்பயன்பாட்டில் நிகழும் தவறுகளைப் பெரிதுபடுத்தக் கூடாது. குழந்தைகள் புதுப்புது முறைகளில் மொழியைக் கையாளும்வகையில் பாடத்திட்டம் நெகிழ்வுத்தன்மையுடன் அமைத்தல்.
- குழந்தைகளின் மொழியாளுமையை ஏற்றுக்கொள்வதோடு, செழுமைப்படுத்தி வளர்த்தெடுக்கும் செயல்பாட்டை உறுதிசெய்தல்.
- தமிழர்மரபு சார்ந்த பாடப்பொருள்களைக் கற்பிக்கும்பொழுது, எது சரி, தவறு என்று அவற்றை அறிவியல் கண்ணோட்டத்துடனும் திறனாய்வு நோக்குடனும் அணுகும் ஆற்றலை மாணவர்களிடம் வளர்த்தல்.
- கதைகள், பாடல்கள், உரைநடை வாயிலாகத் தமிழ் இலக்கணத்தை அறிமுகம் செய்தல். இலக்கணத்தைச் சுமையாகவும் புரியாத ஒன்றாகவும் கருதும் மனநிலையிலிருந்து குழந்தைகளை விடுவித்து அதைச் சுவையாக மாற்றல்.

குழந்தைகளின் எண்ணத்தை, ஆர்வத்தை, விருப்பத்தை ஆளுமையை வளர்க்கக் கூடியதாய்ச் சமச்சீர் கல்விப் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அரசு, அரசு உதவிபெறும் பள்ளிகள், பதின்மப் (மெட்ரிக்) பள்ளிகள், ஆங்கிலோ–இந்தியன் பள்ளிகள், கீழ்த்திசைப் (ஓரியண்டல்) பள்ளிகள் ஆகிய அனைத்துவகைப் பள்ளி மாணவர்களும் ஒத்தவகையில் மொழித்திறனைப் பெறும் வகையில் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

2005இல் உருவாக்கப்பட்ட தேசியக் கலைத்திட்ட வடிவமைப்பு குறித்துள்ள,

* கேட்பதைப் புரிந்துகொள்ளுதல்
* புரிந்துகொண்டு படித்தல்

* தங்குதடையின்றி மொழியை வெளிக்கொணர்தல்
* கருத்துத் தொடர்புடன் எழுதுதல்
* அனைத்துத் துறைகளிலும் மொழியைப் பயன்படுத்துதல்
* புள்ளி விவரம்
* தொகுப்பறிக்கை
* களஆய்வு போன்றவற்றுக்கு மொழியைப் பயன்படுத்துதல்
* மொழியைப் பண்பாட்டுக் கூறுகளோடு உள்வாங்கிக் கொள்ளுதல்
* மையக்கருத்தை அறிதல், சிந்தித்தல்
* சொற்களஞ்சியம் பெருக்கிக் கொள்ளுதல்
* மொழியைத் திறமையாகக் கையாளுதல்
* படைப்பாற்றல் வாயிலாகக் கற்பனைத்திறனை மேம்படுத்துதல்

முதலிய திறன்களை உள்ளடக்கியதாகவும் சமச்சீர்க்கல்விப் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

## மொழிப் பாடத்திட்டத்தின் சிறப்புக்கூறுகள்

பாடத்திட்டம், கீழ்க்குறித்த மொழித்திறன்களை, மொழி இலக்குகளை அடையும் நோக்கத்தினை மையமாகக் கொண்டது.

* குழந்தைகள் தாம் கேட்கும் செய்திகளை உள்வாங்கிக் கொண்டு செயல்படுதல், கேட்ட, படித்த செய்திகளின் மையக்கருத்தைப் புரிந்து கொள்ளல், சிந்தித்தல், கருத்துத் தொடர்புடன் எழுதுதல் ஆகிய அடிப்படைத் திறன்களைப்பெற பாடத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

* குழந்தைகள் மொழிவாயிலாகக் கற்பனைத் திறனை மேம்படுத்தவும், தானே கற்கவும், நடைமுறை இலக்கணத்தைப் புரிந்து பயன்படுத்தவும் பாடத்திட்டம் வழிவகுத்துள்ளது

* உயர்நிலை மொழித்திறன்களான கதை, கவிதை, கட்டுரை, உரையாடல், நாடகம் ஆகியவற்றை உருவாக்கும் திறன்களை வளர்ப்பதாய் அமைந்துள்ளது

* உயர்நிலை மொழியாற்றல்களான மையக்கருத்தறிதல், வினா உருவாக்குதல், வினாவிற்கேற்ற விடையளித்தல், குறிப்பெடுத்தல், பகுத்தல், தொகுத்தல், வகைப்படுத்துதல், விவரித்தல், வெளிப்படுத்துதல், இதழ் தயாரித்தல், நாட்குறிப்பு எழுதுதல் ஆகியவற்றை வளர்க்கும் வகையிலும் அமைந்துள்ளது

* நாள்தோறும் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சிக்கல்களைச் சந்திக்கும்வகையில் படிவங்கள் நிரப்புதலுக்கும், விண்ணப்பங்கள் எழுதுதலுக்கும் பாடத்திட்டத்தில் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன

* மொழியில் மேற்கொள்ள வேண்டிய செயல்திட்டங்களும் பாடத்திட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன

## பாடப்பொருள்

தமிழ், தமிழர்வாழ்வு, தமிழ்மரபு, தமிழ்ப்பண்பாடு, தமிழ்க்கவிஞர்கள், தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்கள், தமிழ்நாட்டு வெற்றியாளர்கள், உலகறிந்த தமிழர்கள், நாட்டுப்புறப் பாடல்கள் இவை சார்ந்த கருத்துகள்; நாள்தோறும் சந்திக்கும் சமுதாயப் பிரச்சினைகள், பெண் முன்னேற்றம், புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள், மதச் சார்பற்ற கருத்துகள், வாழ்வியலை சுவைக்கத் தூண்டும் கதைகள் ஆகியவை பாடப்பொருளாக இடம் பெற்றுள்ளன.

பாடப்பொருள்கள் படம், கதை, பாடல், செய்யுள், உரையாடல், சொற்போர், கடிதம், நாடகம், கட்டுரை ஆகிய வடிவங்களில், குழந்தைகள் விரும்பும் வகையில், குழந்தைகள் மனத்தைத் தொடும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளன.

இப்பாடத்திட்டத்தின் வாயிலாக, தொடக்கநிலை வகுப்பினை நிறைவுசெய்யும் மாணவர் மொழியைப் பிழையின்றிப் பேசவும், எழுதவும், படிக்கவும், ஆளவும், எண்ணங்களை இயல்பாக வெளிப்படுத்தவும் அறிவர். பத்தாம் வகுப்பை நிறைவுசெய்யும் மாணவர் மொழியின் இனிமையையும் சிறப்பையும் உணர்ந்து, படைக்கவும், ஆளவும், சுவைக்கவும் முழு ஆற்றல் பெறுவர்.

## ஆண்டு பாடவேளைத் திட்டம்

### ஆறுமுதல் பத்து வகுப்புகள்

| வ. எண். | பிரிவு | வகுப்புகள் | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 6 | 7 | 8 | 9 | 10 |
| 1. | செய்யுள் | 70 | 70 | 70 | 70 | 70 |
| 2. | உரைநடை | 55 | 55 | 55 | 54 | 54 |
| 3. | இலக்கணம் | 35 | 35 | 35 | 40 | 40 |
| 4. | துணைப்பாடம் | 10 | 10 | 10 | 10 | 10 |
| 5. | கடிதம் (5) கட்டுரை (5) | 10 | 10 | 10 | 10 | 10 |
| 6. | மொழித்திறன் | 44 | 44 | 44 | 40 | 40 |
| | **மொத்தம்** | **224** | **224** | **224** | **224** | **224** |

## மனப்பாடப் பகுதி

| வ. எண். | வகுப்பு | செய்யுள் அடிகள் | மனப்பாட அடிகள் |
|---|---|---|---|
| 1. | 1 | 10 | 10 |
| 2. | 2 | 32 | 32 |
| 3. | 3 | 34 | 34 |
| 4. | 4 | 48 | 42 |
| 5. | 5 | 102 | 67 |
| 6. | 6 | 170 | 77 |
| 7. | 7 | 174 | 72 |
| 8. | 8 | 176 | 80 |
| 9. | 9 | 345 | 80 |
| 10. | 10 | 338 | 90 |

*****

## முதல் வகுப்பு

| திறன் பகுதி / திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| **1. பார்த்தறிதல்** | | |
| 1.1. படங்களைப் பார்த்து பெயர்களைக் கூறுதல் | * குழந்தைகளுக்கு அறிமுகமான, விருப்பமுடைய படங்கள் | * விலங்கு, பறவைகளின் படங்களைப் பார்த்து அவற்றின் செயல்களை வாய்மொழியாகக் கூறச்செய்தல் |
| **2. கேட்டல்** | | |
| 2.1 ஓசை நயமிக்க குழந்தைப் பாடல்களைக் கேட்டல் | * குழந்தைகள் விரும்பும் வகையில் அமைந்த பாடல்கள் – பறவைகள், விலங்குகள், உணவுப் பொருள்கள், விளையாட்டுப் பொருள்கள் போன்ற தலைப்புகளில் அமைந்த ஒலிநயமிக்க பாடல்கள் (4 அடி) | * எளிய, ஒலி நயமிக்க குழந்தைப் பாடல்களைச் செய்கைகளுடன் பாடுதல் |
| 2.2 குழந்தைகள் விரும்பும் கதைகளைக் கேட்டல் | * குழந்தைகள் விரும்பும் படக்கதைகள், சிந்தனையைத் தூண்டும் கதைகள் – விலங்குக் கதைகள் | * கதைகளை உரிய மெய்ப்பாடுகளுடன் குழந்தைகளுக்குக் கூறுதல்/ நடித்துக் காட்டுதல்/ நடிக்கச் செய்தல் |
| 2.3 ஒலிகளை வேறுபடுத்துதல் | * பறவைகள், விலங்குகள், உந்து வண்டிகள் எழுப்பும் ஒலிகள் அடங்கிய பாடல்கள் | * பொம்மலாட்டம் போன்ற செயல்கள் வழி பறவைகள், விலங்குகள், உந்து வண்டிகள் முதலியனவற்றின் ஒலிகளை ஆசிரியர் வெளிப்படுத்துதல்– வேறுபாடு அறியத்தக்க வகையில் வினாக்கள் கேட்டல் |
| **3. பேசுதல்** | | |
| 3.1 தன் பெயர், குடும்பத்தினர் பெயர், ஊர்ப்பெயர் கூறுதல் | * குழந்தை தன் பெயர், குடும்பத்தினர் பெயர், ஊர்ப் பெயரைக் கூறுதல் | * குழந்தைகளிடம் வினாக்கள் வழி பெயர், ஊர், முதலியன பற்றிய தகவல்களைக் கூறச்செய்தல் |
| 3.2 குழந்தை தன்னைச் சுற்றியுள்ளவை பற்றிப் பேசுதல் / பாடுதல் | * ஊர், சுற்றுப்புறம் முதலியனவற்றைக் காட்டும் படம் | * குழந்தை தன்னைப் பற்றியும், தன் வீட்டுச் சூழல் மற்றும் தனக்குப் பிடித்தவை பற்றியும் பேசுதல் / பாடுதல் |
| 3.3 கதை கூறுதல் | * பல்வகைப் பொருள், உயிரினம் உள்ள படங்கள் | * படங்களைப் பார்த்துக் கற்பனையாகக் கதை கூறுதல் |

| திறன் பகுதி / திறன் | | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|---|
| 3.5 | தான் அதுவாக மாறிப் பேசுதல் | * நிகழ்ச்சிகளைக் காட்டுகின்ற விலங்குகள், பறவைகள் அடங்கிய படம் | * விலங்குகள், பறவைகள் பேசுவதுபோல் பேசி நடித்தல் |
| **4.** | **படித்தல்** | | |
| 4.1 | படத்தைப் பார்த்து வாய்விட்டுப் பெயர் சொல்லுதல், அறிந்த எழுத்துகளை அடையாளப்படுத்துதல். | * பட்டம், படம், அணில், மரம், மாமரம், பாப்பா, மாடம் போன்றவற்றின் படங்கள் | * படங்களிலுள்ள பெயர்களைப் படித்தல். எழுத்துகளை ஆசிரியர் ஒலித்துக்காட்டிக் குழந்தைகளை ஒலிக்கச் செய்தல் |
| 4.2 | இரண்டு சொற்களை இணைத்துப் படித்தல் | * இருசொல் தொடர்கள் ( படம் பார், பாப்பா பார்) | * தொடர்களை உரிய ஒலிப்போடு ஒலித்துக் காட்டிக் குழந்தைகளை ஒலிக்கச் செய்தல் |
| **5.** | **எழுதுதல்** | | |
| 5.1 | நேர்கோடு, வளைவுகோடு, சாய்வுகோடுகளை எழுதுதல் | * எழுது பழகு செயல்கள் | * நுண்தசைப் பயிற்சி (தாள்பந்து, களிமண்ணைப் பிசைதல், எழுதுகோலைப் பிடித்தல்) சுழியம், நேர்கோடு, சாய்கோடு, வளைகோடு இடுதல், புள்ளிகளை இணைத்துப் படம் வரைதல் |
| 5.2 | புள்ளிகளை இணைத்து எழுதுதல் | * புள்ளி வடிவிலான எழுத்துகள் | * புள்ளிகளை இணைத்து வரியொற்றி எழுதுதல் |
| 5.3 | பார்த்து எழுதுதல் | * படம், பட்டம், மடம், மட்டம், பலம் போன்ற சொற்கள் | * சொற்களைப் பார்த்து எழுதுதல் |
| 5.4 | சொற்களைச் சொல்லக் கேட்டு எழுதுதல் | * மாணவர் அறிந்த சிறுசிறு சொற்கள். (பழம், மரம், அணில், அப்பம்) | * சொற்களை உரிய ஒலிப்போடு ஆசிரியர் சொல்லுதலும் மாணவர் எழுதுதலும் |
| 5.5 | இருசொற்களை இணைத்து எழுதுதல் | * இயல்புப் புணர்ச்சிக்குரிய சொற்கள் | * சொற்களை இணைத்து எழுதச் செ ய்தல் (அப்பம் தா, பாட்டுப் பாடு, கதைசொல்) |
| **6.** | **படைப்பாற்றல்** | | |
| 6.1 | படங்களுக்குப் பொருத்தமான வண்ணம் தீட்டுதல் | * பூ, பழம், பந்து முதலிய படங்கள் | * படங்களுக்குப் பொருத்தமான வண்ணம் தீட்டச் செய்தல் |
| 6.2 | அச்சுப் பதித்து உருவங்கள் உருவாக்குதல் | * கத்தரிக்காய், வெண்டைக்காய், இலை முதலிய அச்சுகள் | * அச்சுகளைப் பயன்படுத்தி விருப்பமான உருவங்களைப் பதித்துக் காட்டுதல் |

| திறன் பகுதி / திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| 6.3 கதை சொல்லுதல் | * நிகழ்ச்சிகளைக் காட்டும் படங்கள் | * மாணவர் தாங்கள் பார்த்த நிகழ்வுகளைக் கூறுதல் |
| **7. நடைமுறை இலக்கணம்** | | |
| 7.1 ஒத்த ஓசையுடைய சொற்களை இனங்காணல் | * நெல், புல், பல், கல், கடை, நடை, உடை, வடை போன்ற சொற்கள் | * ஒத்த ஓசை வெளிப்படுமாறு சொற்களை ஒலித்தல்– ஒலிக்கச் செய்தல் |
| 7.2 குறிலை நெடிலாகவும், நெடிலைக் குறிலாகவும் மாற்றுதல் | * கல்–கால்; விடு–வீடு; என்–ஏன். மாடு–மடு; நாகம்–நகம்; காலம்–கலம் போன்ற சொற்கள் | * குறிலை நெடிலாகவும், நெடிலைக் குறிலாகவும் மாற்றி சொல் உருவாக்குதல் |
| **8. தானே கற்றல்** | | |
| 8.1 பட அகரமுதலியைப் பயன்படுத்துதல் | * பட அகரமுதலி (Pictorial Dictionary) அகல், ஆடு, இலை, ஈசல்.... (உயிரெழுத்துகளை முதலாகக் கொண்ட படங்கள்) | * படங்களை அகரமுதலிப்படி வரிசைப்படுத்துதல் |
| **9. சொல்லாட்சித் திறன்** | | |
| 9.1 சொற்களஞ்சியம் பெருக்குதல் | * நிறங்கள், கிழமைகள், மாதங்கள், சுவைகள், எண்ணுப் பெயர்கள், உறவுப்பெயர்கள், திசைப் பெயர்கள் அறிதல். அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி. பாரதிதாசன் ஆத்தி சூடி | * பாடப்பொருள் சொற்களை அறிந்து கூறச் செய்தல் |
| | * சிறுவர் நூல்கள் | * நூலகத்திலுள்ள சிறுவர் நூல்களைப் படித்தல் |

## இரண்டாம் வகுப்பு

| திறன் பகுதி / திறன் | | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|---|
| **1.** | **கேட்டல்** | | |
| 1.1 | இயற்கை சார்ந்த பாடல்களைக் கேட்டல் | * இயற்கையைக் கண்டு மகிழும் வகையில் அமைந்த பாடல்கள் – பசு, நிலா, சூரியன் | * பாடல்களைப் பாடி, குழந்தைகளிடம் எளிய வினாக்கள் கேட்டல் |
| 1.2 | சிந்தனையைத் தூண்டும் கதைகளைக் கேட்டல் | * புதிர்க்கதைகள், சிந்தனையைத் தூண்டும் கதைகள் | * மாணவர்களை விடுகதை, கதை கூறச் செய்தல் |
| 1.3 | குழு அறிமுக உரையாடலைக் கேட்டல் | * வகுப்பில் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்துகொள்ளும்வகையில் அமைந்த உரையாடல். தன் பெயர், பெற்றோர் பெயர், ஊர்ப் பெயர், தனக்குப் பிடித்தது பற்றிக் கூறும் முறையில் அமைந்த உரையாடல் | * குழந்தை குழுவில் தன்னைப் பற்றிக் கூறுதல் |
| **2.** | **பேசுதல்** | | |
| 2.1 | தன்னைச் சுற்றியுள்ளவை சார்ந்த விவரங்களைப் பேசுதல் | * பறவைகள், விலங்குகள், இயற்கைத் தாவரங்கள் பற்றிய உரையாடல் | * தன்னைச் சுற்றியுள்ள சூழல் பற்றிப் பேசுதல்<br>* தொலைக்காட்சியில் பார்த்த நிகழ்ச்சி பற்றிப் பேசச் செய்தல் |
| 2.2 | உரிய ஒலிப்புடன் பாடுதல் (ல,ள,ழ, எழுத்துகள் அமைந்த பாடல்கள்) | * மயங்கொலிச்சொற்கள் (ல, ள, ழ, ர, ற, ந, ண, ன) அமைந்த பாடல்கள்<br>(எ.கா) அழகிய தமிழில் எழுதுங்கள் | * பாடல்களைப் பாடச் செய்தல், குழந்தைகள் பாடுதல் |
| 2.3 | படக் கதையைப் பார்த்து நிகழ்வைக் கூறுதல். | * நடைமுறை வாழ்க்கை நிகழ்வுகள் அமைந்த படங்கள் | * படங்களைப் பார்த்து நிகழ்வுகளைத் தொடர்புடன் கூறுதல் |
| 2.4 | வினா எழுப்பும் திறன் | * யார், என்ன, எதை, ஏன் ஆகிய வினாக்களைக் கேட்கத் தக்க படங்கள் | * படம் பார்த்துக் குழந்தைகளை வினா கேட்கச் செய்தல் |
| **3.** | **படித்தல்** | | |
| 3.1 | படங்களோடு கூடிய சொற்களைப் படித்தல் | * படங்களோடு கூடிய சொற்கள் | * சொற்களை எழுத்துக்கூட்டிப் படித்தல் |
| 3.3 | எளிய சந்தப் பாடல்களைப் பாடுதல் | எளிய சந்தப்பாடல்கள் (விளையாட்டுப் பொருள்கள், இயற்கை, தாவரம், விலங்கு, பறவை, உணவுப் பொருள்கள்) | * பாடல்களைச் சந்தத்தோடு பாடச் செய்தல் |
| 3.4 | சிறுவர்படக் கதைகளைப் படித்தல் | * விலங்குகள், பறவைகள் பேசிக் கொள்வது | * கதைப்படங்களைப் படிக்கச் செய்தல் |

| | திறன் பகுதி / திறன் | | பாடப்பொருள் | | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|---|---|---|
| | | | போன்ற கதைப்படங்கள் | | |
| 3.5 | வடமொழி ஒலிக்கான எழுத்துகளைப் படித்தல் | * | ஜ, ஸ, ஷ, ஹ, ஸ்ரீ, க்ஷ ஆகிய எழுத்துகள் கொண்ட சொற்கள் | * | வடமொழி ஒலியுடைய எழுத்துகளைப் படிக்கச் செய்தல் |
| **4.** | **எழுதுதல்** | | | | |
| 4.1 | படங்களைப் பார்த்துப் பெயரை எழுதுதல் | * | யானை, வீடு, குடை, கிளி போன்ற படங்கள் | * | படங்களைப் பார்த்து அவற்றிற்குரிய பெயர்களை எழுதச் செய்தல் |
| 4.2 | படங்களைப் பார்த்துச் சிறுதொடர் எழுதுதல் | * | மாடு மேய்தல், நாய் குரைத்தல், சிறுவர் விளையாடுதல் போன்ற படங்கள் | * | படத்தைப் பார்த்துத் தொடர் உருவாக்குதல் |
| 4.3 | எளிய கதையிலிருந்து வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுதல் | * | படக்கதைகள் | * | எளிய கதையிலிருந்து கேட்கப்படும் வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடை எழுதுதல் |
| 4.4 | சொல்லக் கேட்டு சொற்களை எழுதுதல் | * | எளிய அறிந்த சொற்கள் | * | சொல்லக் கேட்டும் சொல்லிக் கொண்டும் எழுதுதல் |
| 4.5 | வருணனைச் சொற்களை அடையாளம் கண்டு எழுதுதல் | * | நறுமணம் மிக்க மலர், உயர்ந்த மரம் போன்ற வருணனைச் சொற்கள் | * | படங்களைப் பார்த்து வருணனைச் சொற்களை எழுதுதல் |
| 4.6 | வடமொழி ஒலிக்கான எழுத்துகளை எழுதுதல் | * | எவரெஸ்ட், ஜனவரி, காஷ்மீர், ஸ்ரீ நகர் போன்ற பெயர்கள் | * | வடமொழி ஒலிஎழுத்துகளை எழுதச்செய்தல் |
| **5.** | **படைப்பாற்றல்** | | | | |
| 5.1 | விருப்பமான படம் வரைந்து வண்ணம் தீட்டுதல் | * | வண்ணம் தீட்டுவதற்கு ஏதுவான படங்கள் | * | மாணவர், தம் விருப்பத்திற்கேற்றபடி படம் வரைந்து பொருத்தமான வண்ணம் தீட்டுதல் |
| 5.2 | காகித மடிப்புகளைக் கொண்டு உருவம் செய்தல். பெருவிரல் அச்சிலிருந்து உருவங்கள் உருவாக்குதல். | * | காகித உருவங்கள் (எ.கா) கப்பல், தொப்பி போன்றவை. பெருவிரல் அச்சு உருவங்கள் (எ.கா) கத்தரிக்காய், தொப்பி | * | பாடநூலிலுள்ள உருவங்களைச் செய்தல், விருப்பமான உருவங்களை உருவாக்கல் |
| 5.3 | கதை கூறுதல் | * | படநிகழ்வுகள் கொண்ட படங்கள் | * | பாடநூலிலுள்ள படங்களைப் பார்த்து கதை கூறுதல் |
| 5.4 | செயல்திட்டம் மேற்கொள்ளல் | * | செயல்திட்டம் தொடர்பான தலைப்புகள் (களங்கள்) | * | படங்களைத் தொகுத்து வரைந்து படத்தொகுப்பு தயாரித்தல் |

| | | |
|---|---|---|
| **6. நடைமுறை இலக்கணம்** | | |
| 6.1 ஒத்த ஓசையுடைய சொற்களை உருவாக்குதல் | * ஒத்த ஓசையுடைய சொல்தொகுதி | * ஒத்த ஓசையுடைய சொற்களை அடுத்தடுத்துக் கூறுவதான குழுவிளையாட்டு |
| 6.2 ஒருமை, பன்மை ஆக்கம் | * ஒருமை பன்மைச்சொற்கள்<br>(எ.கா) பறவை–பறவைகள், மரம்–மரங்கள் | * சரியான பன்மைச் சொற்களைக் கண்டு அடிக்கோடிடல்/படித்தல் |
| **7. தானேகற்றல்** | | |
| 7.1 எளிய பட அகரமுதலியைப் பயன்படுத்துதல் | * உயிர், மெய், உயிர்மெய்யெழுத்துகள் அடங்கிய பட அகரமுதலி (எ.கா) கரும்பு, காகம். . . | * படங்களின் பெயர்களை அகரவரிசைப்படி எழுதுதல் |
| 7.2 சொற்களை அகரவரிசைப்படுத்துதல் | * உயிர்மெய்யெழுத்துகளை முதலாகக் கொண்ட சொற்கள் | * ப,ம வரிசையிலுள்ள சொற்களை வரிசைப்படி எழுதுதல் |
| **8. சொற்களஞ்சியப் பெருக்கம்** | | |
| 8.1 சொற்களஞ்சியம் பெருக்குதல்<br>பெயர்ச் சொற்களைக் கூறுதல்<br>எதிர்ச்சொற்கள் கூறுதல் | .<br>படை – தடை – உடை – கடை , படு – பசு – பல் – பனை–பணம் – பலம் – பழம் – படம் போன்ற பெயர்ச்சொற்கள் | * எழுத்துகளை இணைத்து எழுதுதல்<br>* சொல் விளையாட்டு<br>* முதல், இடை, கடையெழுத்தை மாற்றிப் புதிய சொல் உருவாக்குதல் |
| | * பள்ளி, மதுரை, காலை, வகுப்பறை, நூல், கிளை, இனிப்பு போன்ற பெயர்ச்சொற்கள் | |
| | * எதிர்ச்சொற்கள் | * பாடநூலிலுள்ள படத்தினைப் பார்த்து உரிய எதிர்ச் சொற்களை எழுதுதல் |
| | * சொல்லின் இறுதி எழுத்தைக் கொண்டு உருவாக்கப்பட்ட சொற்கள்<br>(எ.கா) கம்பு – புன்னகை – கைப்பை – பையன் | * படம் பார்த்துச் சொற்களை உருவாக்குதல் |
| | * ஆத்திசூடி(ஔவையார்), கொன்றை வேந்தன், உலகநீதி | * விழுமங்களின் சிறப்பினை உணர்த்தல் |
| | * சிறுவர் கதை நூல்கள் | * பள்ளி நூலகத்தைப் பயன்படுத்தும் முறை– படிக்கும் ஆர்வத்தைத் தூண்டும் பயிற்சிகள் தருதல் |

# மூன்றாம் வகுப்பு

| திறன் பகுதி / திறன் | | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|---|
| 1. | **கேட்டல்** | | |
| 1.1 | வருணனை, விடுகதைப் பாடல்களைக் கேட்டல் | * வருணனைப் பாடல்கள், விடுகதைப் பாடல்கள் | * வருணனைச் சொற்களைக் கூறச் செய்தல் |
| 1.2 | சிந்தனையைத் தூண்டும் கதைகளைக் கேட்டல் | * திருக்குறளுக்கேற்ற சிந்தனையைத் தூண்டும் கதைகள் | * கற்பனைக் கதைகள் கதையின் தொடக்கத்தைக் கூறி முடிவைக் குழந்தையிடம் கேட்டல். கதையின் முடிவைக்கூறி முன் பகுதியைக் கேட்டல் |
| 1.3 | புதிர்களைக் கேட்டுப் புரிந்துகொண்டு விடை கூறுதல் | * புதிர், விடுகதைகள் | * புதிர்கள், விடுகதைகளை ஆசிரியர் கூற மாணவர்களை விடுவிக்கச் செய்தல் |
| 1.4 | வானொலி / தொலைக்காட்சி செய்திகளைக் கேட்டல் | * வானொலி, தொலைக்காட்சிச் செய்திகள். | * வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் கேட்டு வகுப்பறையில் கலந்துரையாடல் |
| 2. | **பேசுதல்** | | |
| 2.1 | தங்குதடையின்றிப் பேசுதல் | * தன் ஊர், தெரு, பள்ளி, கடைவீதி, பூங்கா, நூலகம், விழாக்கள் பற்றிய தகவல்கள் (ஊர்,தெரு, விளையாட்டிடம், பொதுவிடம், நூலகம்) | * தன் ஊரைப் பற்றியும், தான் வாழும் சூழல் பற்றியும் இயல்பாகத் தங்கு தடையின்றிப் பேசச்செய்தல் |
| 2.2 | உரிய ஒலிப்புடன் பேசுதல், பாடுதல் (ல, ள, ழ, ண, ன, ர, ற,) | * மயங்கொலி எழுத்துகள் அமைந்த பாடல், கதைகள், சொற்றொடர்கள் | * பாடநூலிலுள்ள பாடல்களைப் பாடச்செய்தல், சொற்றொடர்களைச் சரியான உச்சரிப்புடன் பேசச் செய்தல் |
| 2.3 | வருணனை கலந்து பேசுதல் | * பொம்மலாட்ட வடிவில் அமைந்த வருணனைக் கதைப்பாட்டு. (விலங்கு, பறவை பற்றியது) | * பார்த்து மகிழ்ந்த இடங்களைப் பற்றியோ, பொருள்களைப் பற்றியோ வருணனை கலந்து பேசுமாறு பயிற்சியளித்தல் |

| திறன் பகுதி / திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| 2.4 கலந்துரையாடுதல் | * வகுப்பறைத் தூய்மை, தொலைக்காட்சியில் பார்க்க வேண்டிய நிகழ்ச்சிகள், களப்பயணம், பள்ளி ஆண்டுவிழா போன்ற தலைப்புகள் | * குறிப்பிட்ட நிகழ்வைச் செயல்படுத்துவதற்குக் கலந்துரையாடித் திட்டமிடல்<br>* படங்களைப் பார்க்கச் செய்தும் மாணவன் அறிந்த இடம், சூழல், உறவினர் சார்ந்த சொற்களைக் கூறியும் உரையாடல் வடிவில் அமைந்த கதைப்பாடல்களைப் படிக்கச் செய்தும் கலந்துரையாடச் செய்தல் |
| **3. படித்தல்** | | |
| 3.1 அறிவிப்புகள், விளம்பரங்கள், சாலைக் குறியீடுகளைப் படித்தல் | * அறிவிப்பு, விளம்பரம், சாலைக்குறியீடு தொடர்பான படங்கள், சொற்கள் | * வரிசையாகச் செல்லவும், உங்கள் முறைவரும்வரை காத்திருக்கவும், இடப்பக்கம் திரும்புக, பள்ளிப்பகுதி மெதுவாகச் செல்லவும், மருத்துவமனை ஒலி எழுப்பாதே – போன்ற வகையில் அமைந்த அறிவிப்புகளையும் விளம்பரங்களையும் படிக்கச் செய்தல் |
| 3.2 கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள், கதைகளை உரிய ஒலிப்புடன் படித்தல் | * மழை, மலை, காடுகள் பற்றிய கதைகள் | * விலங்குகள், பறவைகள், புதிர்கள் ஆகியவை பற்றிய கதைகளை உரிய உச்சரிப்புடன் படித்தல், படம் பார்த்து வினாக்களுக்கு ஏற்ற விடை தருதல் |
| 3.3 சிறுவர் இதழ்களைப் படித்தல் | * சிறுசிறு கதைகள், துணுக்குகள், புதிர்கள், குறுக்கெழுத்துப் போட்டிகள், பாடல்கள் போன்றவை அடங்கிய சிறுவர் இதழ்கள் | * மாணவர்களுக்குரிய இதழில் வெளிவந்துள்ள சிறுகதைகள், பாடல்கள், துணுக்குகள், புதிர்கள் போன்ற செய்திகளைப் படிக்கத் தூண்டுதல் |
| **4. எழுதுதல்** | | |
| 4.1 படத்தைப் பார்த்துச் சிறுசிறு தொடர்கள் எழுதுதல் | * சிறுசிறு தொடர்கள் (எ.கா) மீன் துள்ளுகிறது, மீனவர் மீன் பிடிக்கிறார், பறவை பறக்கிறது | * படத்தைப் பார்த்து சிறுசிறு தொடர்கள் அமைத்தல், அறிவிப்புகள் எழுதுதல், படம் பற்றிய விவரங்களைத் தொகுத்துத் தொடர்களை எழுதுதல் |

| | திறன் பகுதி / திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|---|
| 4.2 | இடைவெளிவிட்டு எழுதுதல் | * முறையான இடைவெளியுடன் எழுதப்பட்ட தொடர்கள் | * சொற்களடங்கிய ஒரு பத்தியைக் கொடுத்தல். மாணவர் அவற்றைப் பொருளுக்கேற்றவாறு இடைவெளியிட்டு எழுதச் செய்தல். |
| 4.3 | பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளித்தல் | * உரைப்பகுதி | * பத்தி தொடர்பான எளிய வினாக்கள் கேட்டல்– பொருத்தமான விடையளித்தல் |
| 4.4 | புதிர்கள் / வருணனைத் தொடர்கள் எழுதுதுல் | * படங்களும் அவற்றிற்குப் பொருத்தமான புதிர்கள், வருணனைத் தொடர்கள் (எ.டு) விலங்குகள், பறவைகள் குறித்தவை | * படங்களைப் பார்த்துப் பொருத்தமான புதிர்களை எழுதச் செய்தல், விலங்குகள், பறவைகள் படங்களைப் பார்த்து வருணித்து எழுதச் செய்தல் |
| 4.5 | விவரித்து எழுதுதல் | * இடம், விரும்பும் பறவை, விலங்கு முதலியவற்றைப் பற்றிய குறிப்புச் சட்டகம் | * படங்களையும் குறிப்புகளையும் கொடுத்து விவரித்து எழுதச் செய்தல் |
| 5. | படைப்பாற்றல் | | |
| 5.1 | படத்தை நிறைவு செய்தல் | * படத்தின் ஒருபகுதி | * மாணவர்கள் வரைவதற்கு ஏற்ற எளிய படங்களின் பகுதியை அளித்து படத்தை நிறைவு செய்யச் செய்தல் |
| 5.2 | உருவங்களின் வண்ணத்திற்கு ஏற்பத் தானியங்கள் ஒட்டுதல் | * தானியங்கள்(கூலங்கள்) ஒட்டுவதற்கேற்ற படங்கள் | * பறவை, விலங்கு படங்களை வரையச் செய்து அதன் வண்ணத்திற்கு ஏற்ப தானியங்களை ஒட்டச் செய்தல் |
| 5.3 | சொற்களைப் பயன்படுத்திக் கதை உருவாக்கிக் கூறுதல் | * மாலை நேரம், மேகம், மழை, வெள்ளம் போன்ற கதை உருவாக்கத் தக்க சொற்கள் | * சொற்களைக் கொடுத்து கதை உருவாக்கச் செய்தல் |
| 5.4 | செயல்திட்டம் | * ஈரெழுத்து, மூவெழுத்துச் சொற்கள் அடங்கிய படங்கள் | * மாணவர்களிடம் தாள் மற்றும் அட்டைகளை அளித்து செயல்கள் அளித்தல், செய்தித்தாள், சிறுவர் இதழ்களையும் தொகுக்கச் செய்து வகுப்பறையில் படித்துக் காட்டச் செய்தல், விடுகதைகள், பழமொழிகளைத் தொகுக்கச் செய்தல் |

| திறன் பகுதி / திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| **6. நடைமுறை இலக்கணம்** | | |
| 6.1 எழுவாய்க்கேற்ற வினைமுற்று எழுதுதல் | * எழுவாய்க்குப் பொருந்திய வினைமுற்று கொண்ட தொடர்கள்<br>(எ.கா) முகிலன் வந்தான்<br>கவிதா வந்தாள்<br>மக்கள் கூடினர்<br>மாடு வந்தது – மாடுகள் வந்தன<br>பறவை வந்தது – பறவைகள் பறந்தன. | * எழுவாயைக் கொடுத்துப் பொருத்தமான வினைமுற்றை எழுதச் செய்தல் (ஒருமை, பன்மைக்கேற்ற வினைமுற்றுகள்) |
| **7. தானே கற்றல்** | | |
| 7.1 பட அகர முதலியைப் பயன்படுத்துதல் | * உயிர், உயிர்மெய் எழுத்துகள் அடங்கிய சொற்கள் | * உயிர், உயிர்மெய் எழுத்துகள் அடங்கிய சிறிய எளிய சொற்களை அளித்து அவற்றை அகரவரிசைப் படுத்தச் செய்தல் |
| 7.2 இரண்டாம் எழுத்துகளின் அடிப்படையில் (எதுகை) வரிசைப்படுத்துதல் | * ‘இரண்டாம் எழுத்து ஒன்றி வரும் சொற்கள்<br>(எ.கா) மணம்–குணம், மடம்–குடம் | * சொற்களை இரண்டாம் எழுத்துகள் (எதுகை) அடிப்படையில் வரிசைப் படுத்தப் பயிற்சியளித்தல் |
| **8. சொல்லாட்சித் திறன்** | | |
| 8.1 சொற்களஞ்சியம் பெருக்குதல் | * செய்யுள் பகுதியிலுள்ள அருஞ்சொற்கள்<br>* திருக்குறள் கதைகள் (5) பாரதியார் ஆத்தி சூடி(12) , நல்வழி (3) | * பாடநூலிலுள்ள செய்யுள்பகுதி சொற்களுக்கு பொருளுணர்ந்து சொற்களஞ்சியத்தைப் பெருக்குதல்<br>* சில எழுத்துகளைக் கொடுத்து அவற்றைக் கொண்டு பல சொற்கள் உருவாக்குதல்<br>* ஒரு சொல்லில் உள்ள எழுத்துகளைப் பயன்படுத்தி பல சொற்கள் உருவாக்குதல்<br>* எதிர்ச்சொல் எழுதுதல், பொருளறிதல், சொற்றொடர் அமைத்தல் |
| | * குழந்தைநூல்கள் | * நூலக நூல்களிலுள்ள சொற்களைத் |

| திறன் பகுதி / திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| | | தேர்ந்தெடுத்து அவை தொடர்பான விவரங்களைச் சேகரித்து வரிசைப் படுத்துதல் |
| 8.2 மரபுச் சொற்களைப் பயன்படுத்துதல் | * விலங்குகள், பறவைகள் வாழிடங்கள் (எ.கா)<br>முயல் – புதர்<br>எலி – வளை<br>பறவை – கூடு<br>குதிரை – இலாயம்<br>பறவை, விலங்குகளின் இளமைப் பெயர்கள், தங்குமிடம், ஒலிகள் மற்றும் தொகுப்புப் பெயர்கள் | * மரபுப்பெயர்களை எழுதத்தக்க பயிற்சிகள் |

## நான்காம் வகுப்பு

| திறன் பகுதி / திறன் | | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|---|
| **1.** | **கேட்டல்** | | |
| 1.1 | ஓசைநயமிக்க கருத்துப் பாடல்களைக் கேட்டுப் புரிந்து கொள்ளுதல் | * மறுமலர்ச்சிப் பாடல்கள், விழிப்புணர்வுப் பாடல்கள் (பாரதிதாசன், நாமக்கல் கவிஞர், கவிமணி, போன்றோர் பாடல்கள்) | * ஓசைநயம்மிக்க பாடல்களைக் கேட்டு புரிந்து கொள்ளச் செய்தல். |
| 1.2 | நாட்டுப்புறக் கதைகளைக் கேட்டுப் புரிந்து கொள்ளுதல் | * குழந்தைகளுக்கேற்ற நாட்டுப்புறக் கதைகள் | * கதையைக் கேட்டபின் வினாக்களுக்கு விடையளித்தல் |
| 1.3 | சூழ்நிலையில் உற்றுக் கேட்ட விவரங்களைக் கூறுதல் | * நீர்நிலைகள், கடற்கரை, சந்தை, ஊர்த் திருவிழா, கண்காட்சி போன்ற இடங்களில் பேசப்படும் செய்திகள் | * கடற்கரைச் சூழலில் நடைபெறும் நிகழ்வுகளைக் கேட்ட பிறகு அது பற்றிய விவரங்களைக் கூறுதல் |
| **2.** | **பேசுதல்** | | |
| 2.1 | தங்கு தடையின்றி இயல்பாகப் பேசுதல் | * சிறப்புக்குரிய மனிதர், இடம், நிகழ்ச்சி | * தான் விரும்பும் ஒருவர்(காமராசர், அப்துல்கலாம் போன்றோர்), தான் விரும்பிய இடம் (குற்றாலம், முதுமலை போன்றவை) பற்றிக் காரண காரியத்துடன் தங்கு தடையின்றிப் பேசச் செய்தல் |
| 2.2 | விவாதங்களில் பங்கேற்றுப் பேசுதல் | * செல்பேசி, மரபு சாரா எரிபொருள், நெகிழிப் பயன்பாட்டின் நன்மை தீமை | * செல்பேசியின் நன்மை, தீமைகளை விவாதித்துப் பட்டியலிடுதல் |
| 2.3 | வருணனை கலந்து பேசுதல் | * இயற்கை சார்ந்த வருணனைகள் | * குயில், சிங்கம், தேசியக் கொடி போன்றவற்றை வருணித்து எழுதுதல் |
| **3.** | **படித்தல்** | | |
| 3.1 | கதைகளை நிறுத்தக் குறிகளுக்கேற்பப் படித்தல் | * நான் உருவாகிய முறை – சிறுவருக்கேற்ற கதைகள் | * உரிய நிறுத்தற்குறிகளிட்டு தொடரைப் படிக்கச் செய்தல் |

| திறன் பகுதி / திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| 3.2 சுவரொட்டிகள்/அறிவிப்புகளைப் படித்தல் | * அரசுத்துறை அறிவிப்புகள் (கல்வி, சுற்றுச்சூழல், வனம், போக்குவரத்து போன்றவை) | * விளம்பரங்களைப் படித்து வினாக்களுக்கு விடையளித்தல் |
| 3.3 கையெழுத்துக் கடிதங்களைப் படித்தல் | * குழந்தைகளுக்கு உற்சாகம் ஊட்டும் வகையில் அமைந்த கடிதம் (உறவுமுறைக் கடிதம்) | * கையெழுத்து வடிவில் அமைந்த பாடப்பகுதியைப் படித்துப் புரிந்து கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல். |
| 3.4 பழமொழிகளைப் படித்தல் | * வழக்கத்தில் உள்ள பழமொழிகளைப் பயன்படுத்துதல் (கதை, நாடகம், உரையாடல், பாடல் வாயிலாக) | * பழமொழிகளைத் தொகுத்தெழுதிப் படித்தல் |
| **4. எழுதுதல்** | | |
| 4.1 சொல்லக் கேட்டுப் பிழையின்றி எழுதுதல் | * மயங்கொலியை எடுத்துக்காட்டத்தக்கத் தொடர்கள்<br>* உரைப்பகுதி, பத்தி | * பாடங்களுக்குப் பின் அமைந்துள்ள பயிற்சிகளை பிழையின்றி எழுதுதல் |
| 4.2 பத்தியிலிருந்து வினாக்களுக்கு விடை எழுதுதல் | * | * பத்தியைக் கொடுத்து, அது தொடர்பான வினாக்களுக்குச் சரியான விடை எழுதுதல் |
| 4.3 புதிர்கள் எழுதுதல் | * அறிவு செறிவூட்டும் கதைகள், துணுக்குகள் , விடுகதைகள் , புதிர்கள் போன்றவை, | * படங்களைப் பார்த்து புதிர்களை உருவாக்கி எழுதுதல் |
| 4.4 கடிதம் எழுதுதல் | * விடுப்புக்கடிதம் எழுதுதல் | |
| 4.5 கட்டுரை / பாடல் எழுதுதல் | * ஏதாவது ஒரு மரம் / ஆறு / தன் பயன் குறித்து கட்டுரை / பாடல் | * கொடுக்கப்பட்ட தலைப்புகளில் கட்டுரை (அ) பாடல் எழுதப் பயிற்றுவித்தல் |
| **5. படைப்பாற்றல்** | | |
| 5.1 படம் பார்த்து வருணித்து எழுதுதல் | * மயில், வண்ணத்துப் பூச்சி, இயற்கை முதலியவற்றின் படங்கள் | * விலங்குகள் பறவைகள் பூக்கள் பற்றி வருணித்து எழுதுதல் |

| திறன் பகுதி / திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| 5.2 கதை உருவாக்குதல் | * வெவ்வேறு சூழல்களைக் குறிக்கும் படங்கள் | * குறிப்புகளைக் கொடுத்து, குழந்தைக்குப் பிடித்த சூழலைக் கொண்டு கதை உருவாக்குதல், எழுதுதல் |
| 5.3 செயல்திட்டம் – படத்தொகுப்புத் தயாரித்தல் | * குழந்தைகள் வரைந்த / திரட்டிய படங்கள் | * செய்தித்தாளில் வரும் படங்களைத் தொகுத்துப் படத் தொகுப்புத் தயாரித்தல் |
| **6. நடைமுறை இலக்கணம்** | | |
| 6.1 திணைவகை கூறுதல் | உயர்திணை, அஃறிணை சொற்கள்<br>உயர்திணை – மாணவர், ஆசிரியர்<br>அஃறிணை – மரம், விலங்கு | * கொடுக்கப்பட்ட சொற்களை உயர்திணை, அஃறிணை என்று வகைப்படுத்துதல் |
| 6.2 இடம், காலம் வகைகள் கூறுதல் | * இட வகை காட்டும் சொற்கள்<br>* கால வகை காட்டும் சொற்கள் | |
| **7. தானே கற்றல்** | | |
| 7.1 மரபுச் சொற்களைப் பயன்படுத்தல் | மரபுச் சொற்கள் அடங்கிய தொடர்கள்<br>(எ.கா.) குயில் கூவும், நரி ஊளையிடும், யானை பிளிறும். | * பெயர் மரபு, வினை மரபுச் சொற்களை அறியச் செய்தல் |
| 7.2 அகரமுதலியைப் பயன்படுத்திப் பொருள் காணல் | * படங்களோடு கூடிய குழந்தைகள் அகரமுதலி | * அகரமுதலியைப் பயன்படுத்தி சொல் பொருள் கூறுதல்<br>* படங்கள் இல்லாத சொற்பொருள் அகரமுதலியைப் பயன்படுத்திப் பொருள் அறிதல், பாடப்பகுதியில் உள்ள சொற்களின் பொருளறிதல் |

| திறன் பகுதி / திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| **8. சொல்லாட்சித் திறன்** | | |
| 8.1 சொற்களஞ்சியம் பெருக்குதல் | * புதிய சொற்கள், தொகுப்புப் பெயர்களை எழுதச் செய்தல் | * எதிர்ச்சொல் எழுதுதல், பிரித்து எழுதுதல், சேர்த்து எழுதுதல், பொருளறிதல், இணைச் சொற்கள் அமைத்தல் |
| 8.2 மரபுச் சொற்களைப் பயன்படுத்துதல் | * தொகுப்புப் பெயர்கள் (எ.கா) தென்னந்தோப்பு, கரும்புத் தோட்டம், ஆட்டு மந்தை, பறவைக் கூட்டம்<br>* புதிர் விளையாட்டு, மொழி விளையாட்டு<br>* செய்யுள் – நறுந்தொகை , திருக்குறள் (10) நல்வழி / மூதுரை – 3,<br>* தாலாட்டுப் பாடல் (நாட்டுப்பாடல்) | * தொகுப்புப் பெயர்களை எழுதச் செய்தல்<br>* கொடுக்கப்பட்ட செய்யுட் பகுதிகளில் காணப்படும் நீதிநெறிகளை உணர்ந்து பின்பற்றச் செய்தல் |

# ஐந்தாம் வகுப்பு

| திறன் பகுதி / திறன் | பாடப்பொருள் | கற்றல் – கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| **1. கேட்டல்** | | |
| 1.1 விழிப்புணர்வுப் பாடல்களைக் கேட்டல் | * பெண்கல்வி, மூடநம்பிக்கை, சுற்றுச்சூழல், அழகியல் போன்ற தலைப்பில் அமைந்த பாடல்கள் | * பாடநூல்களிலுள்ள பெண்கள் விழிப்புணர்வு, உடல்நலம் பேணுதல், விழுமப் பண்புகளை உணர்த்தும் விழிப்புணர்வுப் பாடல்களைக் கேட்டு, புரிந்து கொண்டு அதன்வழி பின்பற்றச் செய்தல். |
| 1.2 கலந்துரையாடலைக் கேட்டுப் புரிந்து கொள்ளுதல் | * வட்டாரம் சார்ந்த தொழில்கள் – வேளாண்மை அன்றும் இன்றும் – விவாதம், உரையாடல், நேர்காணல் | * வேளாண்மை ஆய்வு மையம், தொடர்வண்டி நிலையம், செங்கற் சூளை போன்ற இடங்களுக்குச் சென்று அது சார்ந்த விவரங்களைத் தொகுத்து மாணவர்களைக் கலந்துரையாடி கேட்கச் செய்தல். |
| 1.3 நாடகத்தைக் கேட்டுப் புரிந்து கொள்ளுதல் | * இலக்கிய நாடகங்கள் | * மாணவர்கள் புரிந்து கொள்ளத்தக்க எளிய இலக்கிய நாடகங்களை வகுப்பறையில் நடத்தியும், படித்தும் புரிந்து கொள்ளச் செய்தல். |
| **2. பேசுதல்** | | |
| 2.1 குறிப்பிட்ட தலைப்பில் பேசுதல் | * குறிப்பிட்ட தலைப்புக் கொடுத்துப் பேசுதல், நான் ஆசிரியரானால், நான் அமைச்சரானால், எனக்கு இறக்கை இருந்தால், நான் பார்த்த இடம், திருவிழா போன்ற தலைப்பு | * மாணவர்கள் வயது நிலைக்கேற்ப அவர்களுக்குப் பிடித்த கற்பனைக் கருத்துகளைப் பேசுதல், சூழல் அளித்து பேசச் செய்தல்; சுற்றுப்புறச்சூழல், சேமிப்பு போன்ற சமூக பயன்பாட்டுக் கருத்துகள் சார்ந்து பேசப் பயிற்றுவித்தல். |
| 2.2 இயல்பாக உரையாடுதல் | * உரையாடல், வழக்கில் பயன்படுத்தப்படும் ஆங்கிலச் சொற்களும் அவற்றிற்கு இணையான தமிழ்ச் சொற்களும் | * மாணவர்கள் களப்பயணம் சென்று வந்த / புதிதாகப் பார்த்த இடங்கள் குறித்து இயல்பாக தமிழில் பேசச் செய்தல்; பாடநூலில் அளிக்கப்பட்டுள்ள உரையாடல் போன்று சூழல் அமைத்து மாணவர்களை இயல்பாக உரையாடப் பயிற்றுவித்தல். |

| திறன் பகுதி / திறன் | | பாடப்பொருள் | கற்றல் – கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|---|
| 2.2 | நாடகங்களில் பங்கேற்று நடித்தல் | * இலக்கிய நாடகம்– அமைதித்தூது, குமணவள்ளல், கொடைஉள்ளம் போன்றவை | * நாடகக் கதாபாத்திரங்களாக மாணவர்களை நடித்துக் காட்டச் செய்தல், ஆண்டு விழா, பள்ளி விழாக்களில் குறிப்பிட்ட பாத்திரங்களேற்றுப் பேசி நடிக்கச் செய்தல். |
| 3. | படித்தல் | | |
| 3.1 | எண் குறிப்புக் கொண்ட விவரங்களைப் படித்தல் | * அங்காடி விலைப்பட்டியல், மருத்துவமனை வரைபடம், பேருந்துக் கால அட்டவணை | * தொடர்வண்டி கால அட்டவணை, பொருட்காட்சி அறிவிப்பு, பேருந்து கால அட்டவணை போன்ற மக்கள் கூடும் இடங்களில் உள்ள எண் விவரம் சார்ந்த அறிவிப்புகளைப் படிக்கவும், புரிந்து கொள்ளவும் பயிற்சிளித்தல். |
| 3.2 | அழைப்பிதழ்கள், நிகழ்ச்சி அறிவிப்புகள், துண்டு வெளியீடுகளைப் படித்தல் | * பள்ளியில் அறிவியல் கண்காட்சி, தமிழ்ச் செம்மொழி இலக்கிய மன்றங்கள் நடத்துவதற்கான அழைப்பிதழ்கள், அறிவிப்புகள், துண்டு வெளியீடுகள் | * அழைப்பிதழ்களைப் படித்து புரிந்து கொள்வதுடன் உருவாக்கச் செய்தல். |
| 3.3 | செய்தித்தாள் படித்தல் | * சந்திராயன் பற்றிய செய்தி, செம்மொழி மாநாடு மற்றும் குழந்தைகளுக்குத் தேவையான செய்திகள் | * செய்தித்தாள்களில் வெளியாகும் மாணவர்களுக்கு ஏற்ற செய்திகளைத் திரட்டச் செய்தல், படித்து புரிந்து கொள்ளச் செய்தல்; அது குறித்து பேச் செய்தல். |
| 3.4 | நாடகங்களைக் குரல் ஏற்றத்தாழ்வுடன் படித்தல் | * இலக்கிய நாடகம் | * பாடநூலிலுள்ள நாடகம், நூலக நூல்களிலுள்ள சிறுவர் நாடகங்களை உரிய மெய்ப்பாடுகளுடன் குரல் ஏற்றத்தாழ்வுகளுடன், உணர்ச்சியுடனும் படிக்கச் செய்தல். |
| 4. | எழுதுதல் | | |
| 4.1 | பொருள் உணர்வுக்கேற்ப இடைவெளிவிட்டு எழுதுதல் | * உணர்வுக்கேற்ப நிறுத்தக்குறிகள் எடுத்தாளப்பட்ட உரைப்பகுதிகள் | * பாடம் தொடர்பான விடைகளைப் பொருள் உணர்வுக்கு ஏற்ப இடைவெளி விட்டு நிறுத்தற்குறிகளுடன் எழுதுதல். |
| 4.2 | பத்தியைப் படித்து வினாக்களுக்கு | * உரைப்பகுதி | * புரிந்து கொண்ட பாடக்கருத்துகளை |

| திறன் பகுதி / திறன் | பாடப்பொருள் | கற்றல் – கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| விடை எழுதுதல் | | விடைகளாக ஏற்ற பக்கத் தலைப்புகளுடன் எழுதுதல் |
| 4.3 உறவுமுறைக்கடிதம் எழுதுதல்/நாட்குறிப்பு எழுதுதல் | * உறவுமுறைக் கடிதம் எழுதுதல் (தாய், தந்தை, அத்தை, மாமா மற்றும் நண்பர்கள்)<br>* அன்றாட நிகழ்வுகளை நாட்குறிப்பாக எழுதுதல் | * மாணவர்களுக்கு உறவுமுறைக் கடிதத்தின் மாதிரியை அளித்து அதே போன்று வேறு கடிதங்களை எழுது வைத்தல்; நாட்குறிப்பு எவ்வாறு எழுதப்பட வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கி நாட்குறிப்பு எழுதப் பயிற்றுவித்தல். |
| 4.4 கட்டுரை / உரையாடல் எழுதுதல் | * கட்டுரை –கலைவாணர், நாட்டுக்குழைத்த நல்லோர், கட்டுரைப் பகுதிகளை விளக்கும் எடுத்துக்காட்டுகள் | * கட்டுரைகள், உரையாடல்கள், முதலியவற்றைப் படிக்கச் செய்து கட்டுரை உறுப்புகள் எவை என்பதையும், எவ்வாறு கட்டுரை அமைய வேண்டும் என்பதையும் விளக்கி கட்டுரை எழுத வைத்தல். |
| 5. படைப்பாற்றல் | | |
| 5.1 பாடல் எழுதுதல், பாடுதல் | * வெவ்வேறு சூழல்கள்அடங்கிய படங்கள், பாடல்கள் | * குழந்தைகள் விரும்பும் பறவை, விலங்கு, பூக்கள் படங்கள் கொடுத்தும், சொற்கள் அளித்தும், சொற்றொடர் அளித்தும் பாடல் எழுதச் செய்தல். பாடலின் முதல் அடியை அளித்து இரண்டாம் அடியை நிறைவு செய்யச் செய்தல்; பாடச் செய்தல். |
| 5.2 தனிநடிப்பு | * நடித்துக் காட்டத்தக்க பாடப்பகுதி | * நாடகக் கதைமாந்தரின் இயல்பினை ஏற்று நடித்துக் காட்டச் செய்தல். இலக்கிய மாந்தர்கள் போன்று வசனங்கள் பேசி நடிக்கச் செய்தல். |
| 5.3 செயல்திட்டம்–இதழ் தயாரித்தல் | * மாணவர்களின் படைப்புகளான நகைச்சுவைத் துணுக்குகள், ஓவியம், கடிதம், கட்டுரை, உரையாடல் போன்ற படைப்புகள் | * கையெழுத்து இதழுக்குத் தேவையான படங்கள் வரைதல், நகைச்சுவைத் துணுக்குகள், கதைகள், புதிர்கள் எழுதுதல், சேகரித்தல், கடிதம், கட்டுரை, உரையாடல் எழுதுதல், ஓவியம் வரைதல், சேகரித்தல் :– அனைத்தையும் தொகுத்து இதழாக அமைக்கப் பயிற்றுவித்தல் |

| திறன் பகுதி / திறன் | | பாடப்பொருள் | கற்றல் – கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|---|
| **6.** | **நடைமுறை இலக்கணம்** | | |
| 6.1 | சொற்றொடர் அமைப்பு முறை அறிதல் | * எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகியவற்றை விளக்கத்தக்க வாக்கியங்கள் | * பாடநூலிலுள்ள சொற்றொடர்களில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் எவை என்பதையும், பிரித்து அறிவது எப்படி என்பதையும், இலக்கணப்படி அவற்றைப் பயன்படுத்தும் முறைகளையும் பயிற்றுவித்தல்.<br>* சொற்றொடர்கள் அமைந்து வரும் முறை அறிதல். பயனிலைக்குப் பொருத்தமான எழுவாய், செயப்படுபொருளை உருவாக்குதல்.<br>(எ.கா) பாடினாள் – வாணி பாடினாள்.<br>– வாணி பாட்டுப் பாடினாள். |
| 6.2 | இணைப்புச் சொற்களை அறிந்து பயன்படுத்துதல் | * எனவே, ஏனெனில், ஆனால், ஆகையால் போன்ற இணைப்புச் சொற்கள் பயன்படுத்தப்பட்ட வாக்கியங்கள்<br>(எ.கா) தாத்தா முறுக்குத் தின்னவில்லை **ஏனெனில்** அவருக்குப் பற்கள் இல்லை | * வினாக்களுக்கு விடை தரும்போதும், கட்டுரைகள் எழுதும் போதும், பேசும் போதும், கலந்துரையாடும் போதும் இணைப்புச் சொற்கள் எவை, அவற்றை எவ்விடங்களில் எவ்வாறு பயன்படுத்துவது எனப் பயிற்றுவித்தல் |
| 6.3 | மரபுத் தொடர்கள் | * பல்வேறு பொருள்களில் வழங்கப்படும் மரபுத்தொடர்கள் | * மரபுத்தொடர்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை எழுதச் செய்தல் |
| 6.4 | நேரிணை, எதிரிணைச் சொற்கள் பயன்படுத்துதல், மயங்கொலிப் பிழை தவிர்த்தல் | * நேரிணை, எதிரிணை சொற்கள் எடுத்தாளப்பட்ட பகுதி, மயங்கொலிச் சொற்களை விளக்கத்தக்க சொற்றொடர்கள் | * சீரும் சிறப்பும், வெற்றி தோல்வி போன்ற நேரிணை, எதிரிணைச் சொற்களைக் கண்டறிதல்; அவற்றை பயன்படுத்தி தொடர்கள் அமைத்தல்; பேசுதலில் அவற்றைக் கையாளுதல் ஆகியவற்றை ஊக்குவித்தல். மயங்கொலிப் பிழை |

| திறன் பகுதி / திறன் | பாடப்பொருள் | கற்றல் – கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| | | தவிர்த்துப் பேசச்செய்தல் |
| **7. தானே கற்றல்** | | |
| 7.1 சிறுசிறு கதைகளைப் படித்தல் | * குழந்தைகளுக்கான நன்னெறிக் கதைகள், பொழுதுபோக்குக் கதைகள் | * துணைப் பாடங்களாக அளிக்கப்பட்டுள்ள சிறுசிறு கதைகளைப் படித்தல்; அதன் மூலம் நன்னெறிகளை அறிதல்; வாழ்க்கையில் பயன்படுத்த ஊக்குவித்தல். |
| 7.2 குழந்தைகள் கலைக்களஞ்சியத்தைப் பயன்படுத்துதல் | * படங்களோடு கூடிய விவரங்கள் அடங்கிய குழந்தைகள் கலைக்களஞ்சியம் | * கலைக்களஞ்சியம் என்றால் என்ன என்பதையும், அதில் அடங்கியுள்ள செய்திகள் எவை என்பதையும், செய்திகளை கலைக்களஞ்சியம் துணை கொண்டு எவ்வாறு கண்டறிவது என்பதையும், அதன் மூலம் அறிதல் திறனை மேம்படுத்துவதையும் கற்றுக் கொடுத்தல். |
| 7.3 அகரமுதலியைப் பயன்படுத்திப் பொருளறிதல் | . சொற்பொருள் அகரமுதலி | * ‘அகர முதலி’ துணை கொண்டு எவ்வாறு சொற்களின் பொருளை அறிவது என்பதையும், பாடநூலின் இறுதியில் அளிக்கப்பட்டுள்ள அகரமுதலியில் (சில சொற்களை அளித்து) பொருளைக் கண்டறியச் செய்தல். |
| **8. சொல்லாட்சித் திறன்** | | |
| 8.1 சொற்களஞ்சியம் பெருக்குதல் | * பாடப்பகுதியில் உள்ள கடினச் சொற்கள் | * பாடநூலில் அளிக்கப்பட்டுள்ள செய்யுள் பகுதிகள் மூலம் சொற்களஞ்சியத்தைப் பெருக்கிக் கொள்ளுதல், கடினச் சொற்களுக்குப் பொருள் கண்டறிவதன் மூலம் மாணவனின் அறிந்த சொற்களஞ்சியத்தைப் பெருக்குதல்; சொற்களைப் பொருளிற்கேற்ப சேர்த்தல், பிரித்தல், சொற்றொடர் அமைத்தல், மொழி விளையாட்டு, புதிர் விளையாட்டு போன்றவற்றின் மூலம் மொழி ஆளுமைத் |

| திறன் பகுதி / திறன் | பாடப்பொருள் | கற்றல் – கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| | | திறனை வளர்த்தல். |
| | | * பொருளறிதல், எதிர்ச்சொல் எழுதுதல், பிரித்து எழுதுதல், சேர்த்து எழுதுதல், சொற்றொடர் அமைத்தல், மொழி விளையாட்டு, புதிர் விளையாட்டு |
| | * திருக்குறள் (12), நீதிநெறிவிளக்கம் (3), கும்மிப் பாடல் (1) , கதைப்பாடல் (1) | |

## ஆறாம் வகுப்பு

### திறன்

1. உரைப்பகுதியை உரிய ஒலிப்புடன் படித்தல், மையக் கருத்தறிதல், வினா உருவாக்குதல், வினாவிற்கேற்ற விடையளித்தல், குறிப்பெடுத்தல், விவரித்தல், தானே கற்றல்

### பாடப்பொருள்

**இயல் – 1**
**செய்யுள்**
வாழ்த்து
திருக்குறள்
**உரைநடை**
தமிழ்த்தாத்தா உ.வே.சா.
**துணைப்பாடம்**
கடைசிவரை நம்பிக்கை
**இலக்கணம்**
இணை எழுத்துக்கள் அறிதல், குறில், நெடில் அறிதல்
**மொழித்திறன் பயிற்சி**
குறில், நெடில் வேறுபாட்டை எடுத்துக்காட்டத்தக்க வாக்கியங்கள். ஒற்றைக் கொம்பு, இரட்டைக் கொம்பு எழுத்துகள் கொண்ட வாக்கியங்கள், சொற்றொடர்கள், இன எழுத்துகள் கொண்ட வாக்கியங்கள், சொற்றொடர்கள், சொற்கள் அறிதல்.

### கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள்

- ஒலிப்புப் பயிற்சிக்கான உரைநடைப் பகுதியைக் குறிப்பிட்டு உரிய நிறுத்தத்துடன் படிக்கச் செய்தல். கால்புள்ளி, அரைப்புள்ளி, முற்றுப்புள்ளி ஆகியவற்றைக் கவனித்துப் படிக்கப் பழக்குதல்.

- செய்யுள், உரைநடைப் பகுதியைக் கொடுத்து, அவற்றின் பொருளடக்கத்தை வெளிப்படுத்துமாறு வினாக்களை உருவாக்கும் பயிற்சி : அறிவுரைப் பகுதியில் அறிவுரைகள் (விழுமியங்கள்) வெளிப்படுமாறான வினாக்கள். எடுத்துக்காட்டாக சில வினாக்கள் கொடுத்து, அவற்றைப் போன்ற பிற வினாக்களை உருவாக்கும் பயிற்சி.

- சில சொற்களில், விடைகள் வரத்தக்க வினாக்கள் அமைக்கப் பயிற்சி அளித்தல்.

- உரைநடைப் பத்தியைக் கொடுத்து அதன் மையப் பொருள் மாறாதவாறு குறிப்புச் சட்டகம் தயாரித்தல். சில எடுத்துக்காட்டுகளைக் கொடுத்து அவற்றைப் போன்று பாடப் பகுதியிலுள்ள பகுதிகளுக்குக் குறிப்பு எழுத பயிற்றுவித்தல்.

- குறிப்புச் சட்டகம் கொடுத்து விரித்து எழுதும் பயிற்சிகள் கொடுத்தல்.

| திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| | | • கொடுக்கப்பட்டுள்ள செய்யுள், உரைநடைப் பகுதி சார்ந்த விழுமியங்கள், நடைமுறை வாழ்க்கைப் பிரச்சினை தொடர்பான வினாக்களைக் கொடுத்து விடை எழுதச் சொல்லுதல்.<br><br>• குறில், நெடில் வேறுபாடுகளை எடுத்துக்காட்டத்தக்க சொற்றொடர்களை எழுதும் பயிற்சி. (எ–டு) வில் இசையும் வீணை இசையும் . . . . . . . ஒற்றைக்கொம்பு, இரட்டைக்கொம்பு உடைய சொற்கள் உடைய சொற்றொடர்களை எழுதுதல். (வெட்டவெளி, வேகாதசோறு. . ) வல்லின, மெல்லின, இடையின வரிசையைக் காட்டும் சொற்களை எழுதுதல், (கட்டை, சட்டை, தட்டை, பட்டை) |
| 2. மொழி ஆளுமைத் திறன்: சொற்போரில் பங்கேற்று, உரிய உணர்வோடு பேசுதல். | **இயல் – 2**<br>**செய்யுள்**<br>நாலடியார்<br>பாரத தேசம்<br>**உரைநடை**<br>பறவைகள் பலவிதம்<br>**துணைப்பாடம்**<br>பாம்புகள் – ஓர் உரையாடல்<br>**இலக்கணம்**<br>குறில், நெடில் உண்டாவது எப்படி ? எழுத்துகளும் உறவும்<br>**மொழித்திறன் பயிற்சி**<br>எண், எண்ணுக்குரிய எழுத்து வடிவம்,<br>சொற்களைச் சேர்த்தும் பிரித்தும் எழுதுதல், | • கற்றல் பகுதியிலுள்ள செய்யுள்களை மேற்கோள்காட்டிச் சொற்பொழிவு தயாரித்தல்.<br><br>• பறவைகளின் செயல்கள், பழக்கங்கள் முதலியன பற்றிக் கலந்துரையாடல்.<br><br>• உரையாடல் பகுதியைச் சுருக்கி எழுதுதல்.<br><br>• உரையாடலை மாணவர்களைக் கொண்டே நிகழ்த்துதல்<br><br>• குறில், நெடில் சொல்லாக்கப் பயிற்சிகள்<br><br>• இனவெழுத்துகள் அமைவது போன்ற |

| | திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|---|
| | | தன் இனவெழுத்துடன் மட்டும் சேரும் எழுத்துகள் | சொற்களை எழுதுதல். (சங்கம், தங்கம், வங்கம்...) (உடனிலை மெய்ம்மயக்கச் சொற்கள், பக்கம், பாக்கம்)<br>• பாடப் பகுதியிலுள்ள சொற்களைப் பிரித்தும், சேர்த்தும் எழுதும் பயிற்சி. (வல்லொற்று மிகுவதாக அமையும் எடுத்துக்காட்டுகள் மட்டும்) |
| 3. | கட்டுரை, கடிதம், விண்ணப்பங்களை உரிய வடிவத்துடன், நிறுத்தக் குறிகளைப் பயன்படுத்தி எழுதுதல், சிந்தனைத் திறன் அறிதல் | **இயல் – 3**<br>**செய்யுள்**<br>நான்மணிக்கடிகை<br>**உரைநடை**<br>ஆராரோ ஆரிரரோ<br>**துணைப்பாடம்**<br>வீரச் சிறுவன்<br>**இலக்கணம்**<br>சொற்களின் வகைகள் – பெயர்ச் சொல், வினைச் சொல் அறிமுகம்<br>**மொழித்திறன் பயிற்சி**<br>ஒற்றுப் பிழை, மயங்கொலிப் பிழை, பெயர்ச் சொல், வினைச் சொல் போன்றவற்றை அறியச் செய்தல் | • கற்றல் பகுதியிலுள்ள செய்யுள்களை மேற்கோள்காட்டி அறவுரை, வருணனைக் கட்டுரை எழுதும் பயிற்சியளித்தல்.<br>• கற்றல் பகுதியிலுள்ள உரைநடைப் பாடங்களில் எடுத்தாளப்பட்டுள்ள நிறுத்தக் குறிகளை எடுத்தெழுதுதல். அவற்றின் தேவையினைப் பற்றியும், நிறுத்தக் குறிகள் இடாததால் ஏற்படும் பொருள் மயக்கத்தையும் எடுத்துக் காட்டுதல்.<br>• பெயர்ச்சொல், வினைச்சொல் வேறுபாட்டை விளக்கத் தக்க பயிற்சியளித்தல்.<br>• வினைச்சொற்களிலிருந்து, பிறவகைச் சொற்களை வருவிக்கும் பயிற்சி.<br>• வல்லொற்றுப் பிழை (இரண்டாம் வேற்றுமை தொகை, விரி)<br>• எழுத்து மாற்றத்தால் பொருள் மாறுபடுவதை எடுத்துக்காட்டும் பயிற்சியளித்தல். |
| 4. | பகுதியைப் படித்துக் கருத்துகளைத் தொகுத்து, வகைப்படுத்தி, வெளிப்படுத்த அறிதல். புதிய | **இயல் – 4**<br>**செய்யுள்**<br>இசையமுது | • கற்றல் பொருளாக உள்ள பாடலில் ஒவ்வொரு பகுதியும் வெளிப்படுத்தும் பொருளைத் தலைப்பாகக் கொண்டு |

| | திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|---|
| | சொற்கள், பிறமொழிச் சொற்கள், இணைச் சொற்கள், ஆகியனவற்றை வெளிப்படுத்துதல் | பழமொழி நானூறு<br>**உரைநடை**<br>மகள் இந்திராவுக்கு நேரு எழுதிய கடிதம்<br>**துணைப்பாடம்**<br>ஊர்த் திருவிழா – ஒரு கலைவிழா<br>**இலக்கணம்**<br>இரட்டைக்கிளவி<br>**மொழித்திறன் பயிற்சி**<br>இரட்டைக்கிளவி<br>ஒற்றைக் கொம்பு, இரட்டைக்கொம்பு, குறில், நெடில் வேறுபாடு அறிதல் | சிறுசிறு பகுதிகள் எழுதுதல். (எடுத்துக்காட்டு: மழை அமுதம், மழையொலி, உழவரும் மழையும். செய்யுளை மேற்கோள்காட்டி எழுதச் செய்தல்).<br>• படங்களில் காணப்படும் நிகழ்ச்சிகள் குறித்துத் தனித்தனியே விவரித்து எழுதும் பயிற்சியளித்தல். (எ–டு) காவல் தெய்வம், கரகாட்டம், பொங்கல்.<br>• ஒலிக்குறிப்புச் சொற்களைப் பயன்படுத்திச் சொற்றொடர் எழுதும் பயிற்சியளித்தல்.<br>• ஒற்றைக்கொம்பு, இரட்டைக்கொம்பு மாற்றத்தைச் சொற்களில்காட்டிப் பொருள்மாற்றத்தைச் சுட்டும் பயிற்சியளித்தல்..<br>• கற்றல்பகுதி உரைநடையில் உள்ள பிறமொழிச் சொற்களை எடுத்தெழுதும் பயிற்சிளித்தல். (எ–டு. முக்கியத்துவம், நாவல். . . .)<br>• குறில், நெடில் வேறுபாட்டால் பொருள் மாறுபடுவதை விளக்கும் பயிற்சியளித்தல். |
| 5. | வரலாற்று நிகழ்வுகளை நினைவு கூறல் மற்றும் மனிதஉறவின் பெருமையினை விளக்குதல் | **இயல் – 5**<br>**செய்யுள்**<br>சித்தர் பாடல்<br>தாகம் – புதுக் கவிதை<br>**உரைநடை**<br>இளமையில் பெரியார் கேட்ட கேள்வி | • குடியாட்சி, முடியாட்சிக் காலங்களின் வாழ்க்கை முறை பற்றி விவாதித்தல்.<br>• மூடநம்பிக்கையால் ஏற்படும் கேடுகள் பற்றி விவாதித்தல்.<br>• சித்தர் பாடலில் காணப்படும் பகுத்தறிவுக் |

| | திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|---|
| | | **துணைப்பாடம்**<br>தங்கமாம்பழமும் சூட்டுக்கோலும்<br>**இலக்கணம்**<br>பிழைகளைக் களைதல்<br>**மொழிப்பயிற்சி**<br>பிழைகளைக் களைதல் – ஒற்றுப் பிழைகள், குறில், நெடில் பிழைகள், துணை எழுத்துப் பிழைகள், மயங்கொலிப் பிழை, சொற்களுடன் ‘உம்’ சேர்த்து எழுதுதல் | கருத்துகளைக் குறித்து விவாதித்தல், மறுமலர்ச்சிக் கருத்துகளை எடுத்துக்காட்டுதல்.<br>• ஒற்றுப்பிழை நீக்கும் பயிற்சியளித்தல்.<br>• குறிலை நெடிலாகவும் நெடிலைக் குறிலாகவும் மாற்றிச் சொற்களை உருவாக்குதல்<br>• மனித உறவுகளின் மேன்மையினை விளக்கும் நிகழ்ச்சிகளைத் தொகுத்தல்.<br>• வரலாற்று நிகழ்ச்சிகளால் பெறத்தக்க படிப்பினைகளைப் பற்றிச் சிந்தித்துத் தீர்வு கூறும் பயிற்சியளித்தல். |
| 6. | உரையாடல், நாடகம் அமைத்து எழுதுதல், நிகழ்ச்சி அறிவிப்புகளை நிரல்படவும், சுவைபடவும் கூறுதல், எழுதுதல் | **இயல் – 6**<br>**செய்யுள்**<br>புறநானூறு<br>திண்ணையை இடித்துத் தெருவாக்கு – புதுக் கவிதை<br>**உரைநடை**<br>தேசியம் காத்த செம்மல்<br>**துணைப்பாடம்**<br>எது பெரிய உண்மை ?<br>**இலக்கணம்**<br>சுட்டெழுத்து<br>**மொழித்திறன் பயிற்சி**<br>சுட்டெழுத்துக்கள், அ, இ, உ அறிமுகம் | • புறநானூற்றுச் செய்யுள் கருத்தை வெளிப்படுத்துமாறு உரையாடல் எழுதப் பயிற்றுவித்தல்.<br>• அறிவிப்பு வடிவச் சொற்றொடர்களை எழுதுதல். அறிவிப்புச் சொல்லாட்சிகளைப் பிறவற்றிலிருந்து வேறுபடுத்தும் பயிற்சிகள் வழங்கல்.<br>• செய்தி, வினா முதலிய சொற்றொடர் வகைகளில் வெளிப்படும் தகவல்களைச் சுவையூட்டத்தக்கவாறு வருணனை, அடைச் சொற்களைப் பயன்படுத்தப் பயிற்றுவித்தல்.<br>• நிரல்பட அமைந்த நிகழ்ச்சிகளின் வரிசைமுறையை மாற்றிச் சுவைபடக் கூறும் உத்திகளைக் காட்டும் பயிற்சிகள்அளித்தல். (பின்னோக்கு, கதைமாறாமல் கூறுதல் |

| திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| | | முதலியன)<br>• செய்யுள் சுவைபட அமைவதற்கான சொல்லாட்சிகளை அடையாளப்படுத்துதல்.<br>• சுட்டெழுத்துக்கள் மொழியில் பயன்படும் தன்மையினை விளக்கும் பயிற்சிகள் |
| 7. பல்துறை அறிவு பெறுதல். (சித்த மருத்துவம், நுண் கலைகள், விளையாட்டு, இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள்) புதிய சொற்களின் பொருளறிதல், அகரமுதலியைப் பயன்படுத்த அறிதல், மறுப்புத் திறன் அறிதல் | **இயல் – 7**<br>**செய்யுள்**<br>திருக்குறள் – இனியவை கூறல்<br>**உரைநடை**<br>கல்லிலே கலைவண்ணம்<br>**துணைப்பாடம்**<br>சாதனைப் பெண்மணி<br>**இலக்கணம்**<br>அளபெடை, திணை, பால்<br><br>**மொழித்திறன் பயிற்சி**<br>அளபெடை – உயிர் அளபெடை, ஒற்றளபெடை<br>திணை – உயர்திணை, அஃறிணை<br>பால் – ஆண் பால், பெண் பால், பலர் பால், ஒன்றன் பால், பலவின் பால் | • அறிவியல் கண்டுபிடிப்புத் தொடர்பான பொது அறிவை எடுத்தெழுதத் தக்க தலைப்புகளைக் கொடுத்துத் தொடர்புடைய கண்டுபிடிப்புகளையும் கண்டுபிடித்த அறிவியல் அறிஞர்களைப் பற்றியும் எழுதச் செய்தல்.<br>• அறிவியல் கலைச் சொல்லாக்கப் பயிற்சி. எளிய சொற்கள், சொல்லாக்க முறை அறிமுகம்.<br>• பிறமொழிச் சொல்லாட்சியைத் தவிர்த்துச் சொற்றொடர்களைச் செம்மையாக எழுதும் பயிற்சி.<br>• சொற்களின் வகைப்பாட்டை அறியத்தக்க பயிற்சிகள் (எ–டு) பெயர், எச்சம், வினை போன்றன) இலக்கணப் பெயர்களை அறிமுகப்படுத்தாமல், வேறுபட்ட அமைப்புகளை அடையாளம் காணுதல்.<br>• ‘அளபெடை’ச் சொல்லாட்சியின் நடைமுறைப் பயன்பாட்டைத் தெரிவிக்கும் எடுத்துக்காட்டுகள் தருதல். |

| திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| 8. மொழி நயம் அறிதல். உவமைகள், பழமொழிகள், மரபுத் தொடர்கள், ஒருசொல் பலபொருள், பலபொருள் ஒருசொல் அறிதல், சொற்களஞ்சியம் பெருக்குதல் | **இயல் – 8**<br>**செய்யுள்**<br>தனிப்பாடல்<br>அந்தக் காலம் இந்தக் காலம்<br>**உரைநடை**<br>தயக்கம் இன்றித் தமிழிலேயே பேசுவோம்<br>**துணைப்பாடம்**<br>நாடும் நகரமும்<br>**இலக்கணம்**<br>மாத்திரை, எண், இடம்<br>**மொழித்திறன் பயிற்சி**<br>மாத்திரை அளவுகள்<br>எண் – ஒருமை, பன்மை<br>இடம் – தன்மை, முன்னிலை, படர்க்கை | • உரைநடை, செய்யுள் வடிவம், கற்றல் பனுவல்களின் சுவைக்குரிய மொழிக் கூறுகளைத் தேர்ந்தெடுக்கும் பயிற்சி<br>• செய்தியின் உவமை, பழமொழி, மரபுத்தொடர் முதலியனவற்றை மாற்றியமைத்து எழுதும் பயிற்சி<br>• மொழிவளக் கூறுகளான தொகைச் சொற்களை, ஒரு சொல் பல்பொருள், ஒரு பொருள் பலசொல் முதலியன கொண்ட பனுவல்களை உருவாக்கும் பயிற்சியளித்தல்.<br>• ஓர் அடிச்சொல்லைக் கொண்டு பல்வகையான சொற்களை உருவாக்கும் பயிற்சியளித்தல்.<br>• இலக்கணப் பகுதியினை இயல்பு முறையில் அறிந்து கொள்ளும் பயிற்சிகளை அளித்தல். |
| 9. நயம் பாராட்டுதல், படைப்பாற்றல் | **இயல் – 9**<br>**செய்யுள்**<br>குற்றாலக் குறவஞ்சி<br>சிலேடைப் பாடல்<br>**உரைநடை**<br>எது பண்பாடு ?<br>**துணைப்பாடம்**<br>வணக்கம் ஐயா!<br>**இலக்கணம்**<br>காலம் அறிதல்<br>**மொழிப் பயிற்சி** | • செய்யுள் நயக் கூறுகளைப் பட்டியலிடுதல்<br>• ஒலி, சொல், பொருள் நயக்கூறுகளை வெளிப்படுத்தத்தக்க தொடர்கள், சொல் தொகுதிகளை எழுதும் பயிற்சி.<br>• நடைமுறைக்குத் தேவையான முத்திரை சொற்றொடர்கள் (விளம்பரத் தன்மையுடையவை) எழுதுதல். (எ–டு: நாளும் கற்போம் ; மேலும் உயர்வோம்) |

| திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| | காலம் – இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் | • செம்மொழிச் சிலேடை அமையுமாறான சொற்களை எழுதப் பயிற்சியளித்தல்<br>• வினை வடிவங்களை மாற்றும் பயிற்சியளித்தல். |

## ஏழாம் வகுப்பு

| திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| 1. உரைப்பகுதியை உரிய ஒலிப்புடன் படித்தல்,<br>மையக் கருத்தறிதல்,<br>வினா உருவாக்குதல்,<br>வினாவிற்கேற்ற விடையளித்தல்,<br>குறிப்பெடுத்தல், விவரித்தல்,<br>தானே கற்றல், சிந்தனைத் திறன் அறிதல் | **இயல் – 1**<br>**செய்யுள்**<br>வாழ்த்து, திருக்குறள்<br>**உரைநடை**<br>**செம்மொழித் தமிழ்**<br>**துணைப்பாடம்**<br>ஊரும் பேரும்<br>**இலக்கணம்**<br>சார்பெழுத்துகளின் வகைதொகை.<br>**மொழித்திறன் பயிற்சி** | • பல்வேறு நிறுத்தக் குறிகளைப் பயன்படுத்தப் பயிற்சியளித்தல். (பயிற்சிக்கான பகுதி கற்றல் பனுவலிலிருந்தும், பனுவல் சாராதனவாகவும் அமையும்)<br>• திருக்குறள் பகுதியிலுள்ள ஒவ்வொரு குறளின் கருத்தையும் சில சொற்களில் கூறும் பயிற்சி (எ.கா) வாய்மை எனப். . . . . . . . . . . . . . . . . .சொல் – தீமையற்ற சொல்லே வாய்மை<br>• சில சொற்கள் விடையாக வரத்தக்க வினாக்கள் அமைத்தல்.<br>• சார்பெழுத்துகளுக்கு எடுத்துக்காட்டுகளைக் கொடுத்து பெயர்களை எழுதும் பயிற்சியளித்தல்.<br>• வல்லினம் மிகுதற்கான எடுத்துக்காட்டுகள் எழுதும் பயிற்சியளித்தல். |
| 2. மொழி ஆளுமைத் திறன் சொற்போரில் பங்கேற்று, ஏற்ற இறக்கங்களுடன் பேசுதல், எழுதுதல் | **இயல் – 2**<br>**செய்யுள்**<br>புறநானூறு, முதுமொழிக்காஞ்சி<br>**உரைநடை**<br>மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார்<br>**துணைப்பாடம்**<br>சிறுகதை<br>**இலக்கணம்**<br>சார்பெழுத்துகள் – உயிர்மெய், ஆய்தம்<br>**மொழித்திறன் பயிற்சி** | • உரைநடைப் பகுதிகளுக்கு ஏற்ற துணைத் தலைப்பு எழுதப் பயிற்சியளித்தல்.<br>• சொற்போருக்கான பகுதிகளை எழுதும் பயிற்சியளித்தல்.<br>• கருத்தை ஏற்கும், மறுக்கும் உத்திகளை எடுத்துக்காட்டுதல்.<br>• உணர்வுகளுக்கு ஏற்ற சொற்களைத் தேர்ந்தெடுக்கும் பயிற்சி<br>• கற்ற செய்யுள் பகுதியை மேற்கோள்காட்டி, மேடைப் பேச்சு |

| | திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|---|
| | | | தயாரித்தல்.<br>• துணைப்பாடப் பகுதியிலிருந்து, விழுமியங்களை வெளிப்படுத்தும் விளக்கக் குறிப்புத் தயாரித்தல்.<br>• கொடுக்கப்பட்ட குறிப்பு அடிப்படையில் தமிழரின் பண்பாட்டுச் சிறப்பை வெளிப்படுத்தும் பயிற்சி. |
| 3. | பகுதியைப் படித்துக் கருத்துகளைத் தொகுத்து, வகைப்படுத்தி, வெளிப்படுத்த அறிதல். புதிய சொற்கள், பிறமொழிச் சொற்கள், இணைச் சொற்கள் அறிதல், மறுப்புத் திறன் அறிதல் | **இயல் – 3**<br>**செய்யுள்**<br>திரிகடுகம்<br>**உரைநடை**<br>கணிதமேதை இராமானுசம்<br>**துணைப்பாடம்**<br>சிறுகதை<br>**இலக்கணம்**<br>நால்வகைச்சொற்கள்<br>**மொழித்திறன் பயிற்சி** | • செய்யுள் கருத்தினை வகைப்படுத்திக் கூறும் பயிற்சி. (எ–டு) மனத்தின் தன்மை, மொழியின் தன்மை, மெய்யின் தன்மை – செய்யுள்களைப் பொருத்திக் காட்டுதல்.<br>• உரைநடைப் பகுதியிலுள்ள பிறமொழிச் சொற்களுக்குத் தூய தமிழ்ச் சொற்கள் உருவாக்கும் பயிற்சி.<br>• துணைப்பாடப் பகுதியிலிருந்து, இணைச் சொற்கள், புதிய சொற்கள், பிறமொழிச் சொற்கள் முதலியனவற்றைப் பட்டியலிடச் செய்தல்.<br>• தலைப்பு ஒன்றைத் தந்து, அதற்கு வலு சேர்க்கக் கூடிய கருத்துகளைத் தொகுக்கும் பயிற்சி.<br>• நால்வகைச் சொற்களைப் பிரிக்கும் பயிற்சி |
| 4. | கட்டுரை, கடிதம், விண்ணப்பங்களை உரிய வடிவத்துடனும், நிறுத்தக் குறிகளைப் பயன்படுத்தியும் எழுதுதல், மனித உறவுத் திறன் அறிதல் | **இயல் – 4**<br>**செய்யுள்**<br>தனிப்பாடல்<br>**உரைநடை**<br>காந்தியடிகள் கடிதம் | • பொருளுடைய சொற்களை அடையாளம் காணும் பயிற்சி. அவற்றைப் பொருத்தமாக சொற்றொடரில் அமைத்தல்.<br>• பல்வேறு சூழல்களில் எழுதப்படும் விண்ணப்பங்கள் பற்றிய அறிமுகம் ; |

| திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| | **துணைப்பாடம்**<br>சிறுகதை<br>**இலக்கணம்**<br>இடுகுறிப்பெயரும் காரணப்பெயரும்<br>**மொழித்திறன் பயிற்சி** | விண்ணப்பங்கள் எழுதுதல்.<br>• கதைகளிலிருந்து பெறத்தக்க அறிவுரைகளைப் பட்டியலிட்டுப் பிற எடுத்துக்காட்டுகள் தருதல்.<br>• முழக்க சொற்றொடர்களைக் கொடுத்துப் பொருத்தமான வரலாற்று நிகழ்ச்சியை எழுதும் பயிற்சி.<br>• பெயர்ச் சொற்களை வகைப்படுத்தும் பயிற்சி |
| 5. வரலாறு, பண்பாடு அறிதல் | **இயல் – 5**<br>**செய்யுள்**<br>திருவாரூர் நான்மணிமாலை, வாணிதாசன் பாடல்<br>**உரைநடை**<br>தூங்கா நகர்<br>**துணைப்பாடம்**<br>சிறுகதை<br>**இலக்கணம்**<br>அறுவகைப் பெயர்ச்சொற்கள்<br>**மொழித்திறன் பயிற்சி** | • செய்யுள் பொருட் பின்னணியை வெளிப்படுத்தும் பயிற்சி.<br>• செய்யுள் வெளிப்படுத்தும் அறிவுரையினை விளக்கும் பயிற்சி.<br>• படித்த செய்யுள்களை மேற்கோள்படுத்தி, சொற்போர் தயாரித்தல்.<br>• துணைப்பாடப் பகுதியிலுள்ள வரலாற்றுக் குறிப்புகளை விளக்குமாறு தகவல்களைத் திரட்டுதல்.<br>• அறுவகைப் பெயர்களை வகைப்படுத்தும் பயிற்சி |
| 6. உரையாடல், நாடகம் அமைத்து எழுதுதல், நிகழ்ச்சி அறிவிப்புகளை நிரல்படவும், சுவைபடவும் கூறுதல், எழுதுதல் | **இயல் – 6**<br>**செய்யுள்**<br>மருதகாசியின் பாடல்,<br>ந. பிச்சமூர்த்தியின் கவிதை<br>**உரைநடை**<br>நெசவு – நாடகம்<br>**துணைப்பாடம்**<br>தமிழ் நாடக முன்னோடிகள்<br>**இலக்கணம்**<br>வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் | • கவிதை வரிகளை மேற்கோள்படுத்தி உரையாடல் எழுதுதல்.<br>• கவிதை வரிகளுக்குப் பொருத்தமான முழக்க வாக்கியங்கள் எழுதுதல்.<br>• வாழ்க்கை வரலாற்றுச் சிறப்பை விளக்கும் மேற்கோள் செய்யுள்களை எடுத்துக்காட்டுதல்.<br>• சொல் வடிவ மாற்றப் பயிற்சி<br>• பிறமொழிச் சொற்களுக்குத் தமிழ் சொற்கள் ஆக்கப் பயிற்சி. |

| திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| | **மொழித்திறன் பயிற்சி** | |
| 7. பல்துறை அறிவு பெறுதல். (சித்த மருத்துவம், விளையாட்டு, இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள்) புதிய சொற்களின் பொருளறிதல், அகரமுதலியைப் பயன்படுத்த அறிதல் | **இயல் – 7**<br>**செய்யுள்**<br>திருக்குறள், முக்கூடற் பள்ளு<br>**உரைநடை**<br>இயற்கை வேளாண்மை – நேர்காணல்<br>**துணைப்பாடம்**<br>சிறுகதை<br>**இலக்கணம்**<br>வேற்றுமை, அடைமொழி<br>**மொழித்திறன் பயிற்சி** | • பல்துறைகளில் பயன்படும் சொற்கள் உருவாக்குதல்<br>• அறிவியல் கண்டுபிடிப்புகள் தொடர்பான செய்திகளைச் சிறுசிறு தலைப்புகளில் எழுதுதல்.<br>• இயற்கை வேளாண்மைப் பற்றிய சிறப்புகளைச் சிறுசிறு தலைப்புகளில் எழுதும் பயிற்சி. |
| 8. மொழி நயம் அறிதல். (உவமைகள், பழமொழிகள், மரபுத் தொடர்கள், ஒருசொல் பலபொருள், பலபொருள் ஒரு சொல் அறிதல்) | **இயல் – 8**<br>**செய்யுள்**<br>தனிப்பாடல்,<br>தாலாட்டுப் பாடல்<br>**உரைநடை**<br>தமிழகத்தின் அன்னிபெசண்ட்<br>**துணைப்பாடம்**<br>சிறுகதை<br>**இலக்கணம்**<br>மூவகைப்போலிகள்<br>**மொழித்திறன் பயிற்சி** | • கற்றல் பனுவலிலுள்ள மொழிநயக் கூறுகளை வெளிப்படுத்தும் பயிற்சி.<br>• கற்றல் பனுவலை, உவமை, பழமொழி, மரபுத்தொடர் இணைத்துச் சுவைபட மாற்றி எழுதும் பயிற்சி.<br>• துணைப்பாடப் பகுதியில் உள்ள செய்திகளைச் சிறுசிறு தலைப்பிற்குள் எழுதுதல்.<br>• கற்றல் பனுவலில் உள்ள மொழிவளக் கூறுகளை அடையாளப்படுத்துதல். அவற்றைப் பயன்படுத்தி சொற்றொடர்கள் எழுதுதல்.<br>• பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் எழுதுதல்.<br>• மொழிப் போலிகளுக்கான எடுத்துக்காட்டுகள் தருதல். |
| 9. சொற்களஞ்சியம் பெருக்குதல் | **இயல் – 9**<br>**செய்யுள்**<br>அம்மானை,<br>சீவகசிந்தாமணி | • கற்றல் பனுவலில் உள்ள புதிய சொற்களைப் பட்டியலிடுதல்.<br>• பட்டியலிட்ட சொற்களை |

| திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| | **உரைநடை**<br>தமிழக விளையாட்டுகள்<br>**துணைப்பாடம்**<br>சிறுகதை<br>**இலக்கணம்**<br>சொல்<br>**மொழித்திறன் பயிற்சி** | வகைப்படுத்துதல்<br>• சொற்களை<br>• இலக்கணம்<br>• துறை<br>• அமைப்பு<br>• மொழி<br>என வகைப்படுத்துதல். |
| 10 நயம் பாராட்டுதல், படைப்பாற்றல் | **இயல் – 10**<br>**செய்யுள்**<br>பாரதிதாசன் பாடல்<br>கம்பர் பாடல்<br>**உரைநடை**<br>ஓவியக்கலை<br>**துணைப்பாடம்**<br>சிறுகதை<br>**இலக்கணம்**<br>அணியிலக்கணம், நிறுத்தற்குறிகள்<br>**மொழித்திறன் பயிற்சி** | • செய்யுள் நயம் பாராட்டல் பயிற்சி<br>• நயக் கூறுகளைப் பட்டியலிடல்<br>• கற்றல் பனுவல் தொடர்பான செயல்களை நயம்பட உரைக்கத்தக்க பழமொழிகள், மரபுத்தொடர்கள், முழக்கத்தொடர்கள் தயாரித்தல்.<br>• ஓவியக்கலை தொடர்பான சொற்களைத் திரட்டுதல்.<br>• அணிகளை விளக்கும் எடுத்துக்காட்டுச் செய்யுள்கள்<br>• தலைப்புகளுக்கேற்ப மன வரைபடம் வரைதல். |

## எட்டாம் வகுப்பு

| | திறன் | பாடப்பொருள் | கற்றல் – கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|---|
| 1. | உரைப்பகுதியை உரிய ஒலிப்புடன் படித்தல், மையக் கருத்தறிதல், வினா உருவாக்குதல், வினாவிற்கேற்ற விடையளித்தல், குறிப்பெடுத்தல், விவரித்தல், தானேகற்றல், சிந்தனைத் திறன் அறிதல் | **இயல் – 1**<br>**செய்யுள்**<br>வாழ்த்து, திருக்குறள்<br>**உரைநடை**<br>உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டுச் சிறப்புகள்<br>**துணைப்பாடம்**<br>சி.யு. போப்பு<br>**இலக்கணம்**<br>குற்றியலுகரம், குற்றியலிகரம், முற்றியலுகரம்<br>**மொழித்திறன் பயிற்சி** | தாயுமானவரின் பொதுவான கடவுட்கொள்கை வெளிப்படுமாறு கற்பித்தல்; திருக்குறட்கருத்துகளை மாணாக்கர் உளங்கொளத்தக்க கதைகள் – நிகழ்வுகள் தந்து கற்பித்தல்; செம்மொழி மாநாடு தொடர்புடைய குறிப்புகள் கொடுத்துக் கட்டுரை வரையச் செய்தல். துணைப்பாடக் கட்டுரையை மாணாக்கர் தாமே படிக்கவும், குறிப்பெடுக்கவும் பயிற்றுதல். |
| 2. | மொழி ஆளுமைத் திறன், விவாதங்களில் பங்கேற்று ஏற்ற இறக்கங்களுடன் பேசுதல், எழுதுதல், சிந்தனைத் திறன் அறிதல் | **இயல் – 2**<br>**செய்யுள்**<br>இனியவை நாற்பது,<br>அயலகக்கவிஞர் பாடல்<br>**உரைநடை**<br>அகரமுதலி வரலாறு<br>**துணைப்பாடம்**<br>சிறுகதை<br>**இலக்கணம்**<br>இலக்கியவகைச் சொற்கள்<br>**மொழித்திறன் பயிற்சி** | செய்யுள் தரும் பொருள் உணர்வுக்கேற்பக் குரல் ஏற்றத் தாழ்வுடன் படிக்கக் கற்பித்தல், அகரமுதலி அமைப்புப் பற்றிச் சிந்தனையைத் தூண்டல் ; இலக்கிய வகைச் சொற்களுக்கான எடுத்துக்காட்டுகளைப் பாடநூலில் உள்ள பாடப்பகுதி வழிக் கற்பித்தல். |
| 3. | பகுதியைப் படித்துக் கருத்துகளைப் பகுத்தும், தொகுத்தும், வகைப்படுத்தியும், வெளிப்படுத்த அறிதல். புதிய சொற்கள், பிற மொழிச் சொற்கள், இணைச் சொற்கள் அறிதல் | **இயல் – 3**<br>**செய்யுள்**<br>திருவள்ளுவ மாலை,<br>நளவெண்பா<br>**உரைநடை**<br>உலகம் உள்ளங்கையில் | செய்யுட் பகுதியின் கருத்துகளை மாணாக்கர் தொகுத்துக் கூற வழிகாட்டுதல். உரைநடைப் பாடத்தை மையமாகக் கொண்டு புதிய சொற்கள், பிறமொழிச் சொற்கள், இணைச் சொற்களை மாணாக்கரே இனங்காணுமாறு பயிற்றல். செறிவிணை, முரணிணைச் |

| திறன் | பாடப்பொருள் | கற்றல் – கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| | **துணைப்பாடம்**<br>சிறுகதை<br>**இலக்கணம்**<br>வழக்கு<br>**மொழித்திறன் பயிற்சி** | சொற்களைப் பட்டியலிடச் செய்தல். |
| 4. கட்டுரை, கடிதம், விண்ணப்பங்களை உரிய வடிவிலும், முறையிலும், நிறுத்தக்குறிகளைப் பயன்படுத்தி எழுதுதல், மறுப்புத் திறன் அறிதல் | **இயல் – 4**<br>**செய்யுள்**<br>விவேகசிந்தாமணி, பாரதத்தாய்<br>**உரைநடை**<br>இந்திய விடுதலைப் போரில் தமிழகப் பெண்களின் பங்கு<br>**துணைப்பாடம்**<br>சிறுகதை<br>**இலக்கணம்**<br>தொகைநிலைத் தொடர்கள்<br>**மொழித்திறன் பயிற்சி** | செய்யுள் நயம் உணர்த்துவதோடு மையக் கருத்தினை மாணாக்கரே கூறுமாறு பயிற்றல் ; உரைநடைச் செய்திகளைக் கட்டுரை, கடிதம் வாயிலாகத் தெரிவிக்கக் கற்பித்தல்; விதி வருமுறையில் தொகைநிலைத் தொடர்களைக் கற்பித்தல். |
| 5. வரலாறு, பண்பாடு அறிதல் | **இயல் – 5**<br>**செய்யுள்**<br>காவடிச் சிந்து,<br>விக்கிரமசோழன்உலா<br>**உரைநடை**<br>செய்தி உருவாகும் வரலாறு<br>**துணைப்பாடம்**<br>சிறுகதை<br>**இலக்கணம்**<br>தொகாநிலைத்தொடர்கள்<br>**மொழித்திறன் பயிற்சி** | காவடிச் சிந்துக்கு உரிய இசையோடும் இசைவு தோன்றவும் கற்பித்தல் – கற்கச் செய்தல் ; செய்தி உருவாகும் வரலாற்றை வரலாற்று முறையில் கற்பித்தல் ; குறிப்புகள் கொடுத்து விரிவாக எழுதச் செய்தல். |
| 6. உரையாடல், நாடகம் அமைத்து எழுதுதல். நிகழ்ச்சி அறிவிப்புகளை நிரல்படவும், சுவைபடவும் கூறுதல், எழுதுதல் | **இயல் – 6**<br>**செய்யுள்**<br>திருமந்திரம், தேம்பாவணி<br>**உரைநடை**<br>நாடகக் கலை | திருமந்திரத்தின் உட்பொருள் வெளிப்படுமாறு கற்பித்தல். தேம்பாவணியின் நயம் வெளிப்படக் கற்பித்தல் – கற்கச் செய்தல்; நாடகக் கலை வளர்ச்சியைச் சுவையாகக் கூறுதல் – கூறச் செய்தல்; வீதி நாடகம் நிகழ்த்துதல். |

| திறன் | பாடப்பொருள் | கற்றல் – கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| | **துணைப்பாடம்**<br>வீதி நாடகம்<br>**இலக்கணம்**<br>ஆகுபெயர்<br>**மொழித்திறன் பயிற்சி** | வாழ்க்கையிலிருந்து உரிய எடுத்துக்காட்டுகள் தந்து ஆகுபெயரைக் கற்பித்தல். மாணாக்கரை எடுத்துக்காட்டுகள் தொகுத்துவரச் செய்தல். |
| 7. பல்துறை அறிவு பெறுதல். (சித்த மருத்துவம், விளையாட்டு, இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் ...) புதிய சொற்களின் பொருளறிதல், அகரமுதலியைப் பயன்படுத்த அறிதல், மனித உறவுத் திறன் அறிதல் | **இயல் – 7**<br>**செய்யுள்**<br>திருக்குறள், திருவருட்பா<br>**உரைநடை**<br>தமிழர் வானியல்<br>**துணைப்பாடம்**<br>கலீலியோ கலீலி<br>**இலக்கணம்**<br>வேற்றுமை<br>**மொழித்திறன் பயிற்சி** | திருக்குறள் கருத்துகளை மாணாக்கர் உளங்கொளத்தக்க வாழ்வியல் நிகழ்வுகள் – கதைகள் – சான்றோர் வாழ்க்கை வரலாறுகள் கூறிக் கற்பித்தல் ; உரைநடைப் பாடத்தின் வழிப் புதிய சொற்கள் – பொருள் கலைச்சொற்கள் முதலானவற்றை இனங்காணச் செய்தல் – தொகுக்கச் செய்தல். விதி வருமுறையில் வேற்றுமை இலக்கணம் கற்பித்தல். |
| 8. மொழி நயம் அறிதல். (உவமைகள், பழமொழிகள், மரபுத் தொடர்கள் ஒருசொல் பலபொருள், பலபொருள் ஒரு சொல் அறிதல்) | **இயல் – 8**<br>**செய்யுள்**<br>வில்லிபாரதம், முடியரசன் பாடல்<br>**உரைநடை**<br>தேவநேயப் பாவாணர்<br>**துணைப்பாடம்**<br>சிறுகதை<br>**இலக்கணம்**<br>புணர்ச்சி – இயல்பு, விகாரம்<br>**மொழித்திறன் பயிற்சி** | இந்த இயலின் செய்யுட் பகுதியை முறையாகக் கற்பிப்பதோடு, அவற்றுடன் கருத்துத் தொடர்புடைய உவமைகள், பழமொழிகள், மரபுத் தொடர்கள் முதலானவற்றைக் கற்பித்தல், மாணாக்கரைத் தொகுக்கச் செய்தல், உரைநடைவழி ஒரு சொல் பலபொருள், பல பொருள் ஒரு சொல் காணும் பயிற்சியளித்தல். இயல்பு – விகாரப் புணர்ச்சிக்குரிய எடுத்துக்காட்டுகளைப் பாடநூலிலிருந்து எடுத்துக்காட்டச் செய்தல். |
| 9. சொற்களஞ்சியம் பெருக்குதல் | **இயல் – 9**<br>**செய்யுள்**<br>கம்பராமாயணம், பாரதிதாசன் பாடல்<br>**உரைநடை**<br>காட்டுயிரிகள்<br>**துணைப்பாடம்**<br>அருங்காட்சியகம் | காப்பிய நயம், கவிநயம், வெளிப்பட இராமாயணத்தைக் கற்பித்தல், பாவேந்தரின் கவியுள்ளம் வெளிப்படுமாறு பாடலைக் கற்பித்தல். உரைநடை, துணைப்பாடக் கட்டுரையின் துணையுடன் சொற்களஞ்சியப் பெருக்கப் பயிற்சியளித்தல், இலக்கணப் பகுதியை முன் பகுதியில் சுட்டிய முறையில் |

| திறன் | பாடப்பொருள் | கற்றல் – கற்பித்தல் செயல்பாடுகள் |
| --- | --- | --- |
| | **இலக்கணம்**<br>புணர்ச்சி – உயிரீறு, மெய்யீறு<br>**மொழித்திறன் பயிற்சி** | கற்பித்தல் – அவ்வாறே கற்கச் செய்தல். |
| 10. நயம் பாராட்டுதல், படைப்பாற்றல் | **இயல்–10**<br>**செய்யுள்**<br>முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்<br>**உரைநடை**<br>இலக்கியத்தில் நகைச்சுவை<br>**துணைப்பாடம்**<br>சிறுகதை<br>**இலக்கணம்**<br>யாப்பிலக்கணம், அணியிலக்கணம்<br>**மொழித்திறன் பயிற்சி** | செய்யுளை ஓசைநயம் வெளிப்படக் கற்பித்தல் – கற்கச் செய்தல். நயம் உணர்த்தல். இதுவரை கண்ட செய்யுட் பகுதிகளுக்கான நயங்களை மாணாக்கரே தொகுக்கப் பயிற்றுதல். உரைநடையைக் கற்பித்த பிறகு நகைச்சுவைத் துணுக்குகள் படைக்கச் செய்தல்.<br>யாப்பு, அணி – இலக்கணப் பகுதிகட்குப் பாடநூலிலுள்ள செய்யுட் பகுதிகளின் துணையுடன் கற்பித்தல் – கற்கச் செய்தல். |

## ஒன்பதாம் வகுப்பு

| திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| 1. உரைப்பகுதியை உரிய ஒலிப்புடன் படித்தல், மையக் கருத்தறிதல், வினா உருவாக்குதல், வினாவிற்கேற்ற விடையளித்தல், குறிப்பெடுத்தல், விவரித்தல், தானே கற்றல், சிந்தனைத் திறன் அறிதல் | **இயல் – 1**<br>**செய்யுள்**<br>வாழ்த்து, செம்மொழி வாழ்த்து<br>திருக்குறள்<br>**உரைநடை**<br>திராவிட மொழிகள்<br>**துணைப்பாடம்**<br>சிறுகதை<br>**இலக்கணம்**<br>எழுத்து ( சார்பெழுத்து ), எழுத்துப் பிறப்பு<br>**மொழித்திறன் பயிற்சி** | செய்யுளுக்குரிய ஓசைநயம் தோன்றக் கற்பித்தல் – கற்றல்; செய்யுளின் பல்வகைநயம் உணர்த்தல் – உணர்தல் ;<br>பாடப் பொருளினை மாணாக்கரே உணரும் வண்ணம் வினாக்கள் மூலம் வரவழைத்தல், வாய்விட்டுப் படிக்கச் செய்தல் ; மாணாக்கர் தாமே கதையைப் படித்துக் கருத்துக் கூறவும், எழுதவும் செய்தல் ; விதி விளக்க முறையில் இலக்கணம் அறிவு பெறச் செய்தல். |
| 2. மொழி ஆளுமைத் திறன்– விவாதம் உரையாடல்களில் பங்கேற்று, ஏற்ற இறக்கங்களுடன் பேசுதல், மனித உறவுத் திறன் அறிதல் | **இயல் – 2**<br>**செய்யுள்**<br>சிறுபஞ்சமூலம், பாஞ்சாலி சபதம்<br>**உரைநடை**<br>இக்காலக் கவிதைகள்<br>**துணைப்பாடம்**<br>கண்ணதாசன் கவியின்பம்<br>**இலக்கணம்**<br>ஆகுபெயர்<br>**மொழித்திறன் பயிற்சி** | பொருள் உணர்வுக்கேற்பக் குரல் ஏற்றத் தாழ்வுடன் பாடப்பகுதியை ஆசிரியர் படித்துக்காட்டி மாணவர்களையும் படிக்கச் செய்தல் ; கவிதைச் சொற்களை இனங்காட்டி மாணாக்கரை அவ்வாறே தொகுக்கச் செய்தல் ; ஆகுபெயருக்கு இக்கால எடுத்துக்காட்டுகள் கூறச் செய்தல். |
| 3. பகுதியைப் படித்துக், கருத்துகளைப் பகுத்தும், தொகுத்தும், வகைப்படுத்தியும், வெளிப்படுத்த அறிதல். புதிய சொற்கள், பிறமொழிச் சொற்கள், இணைச் சொற்கள் அறிதல் | **இயல் – 3**<br>**செய்யுள்**<br>புறநானூறு<br>குறுந்தொகை<br>**உரைநடை**<br>கடற்பயணம்<br>**துணைப்பாடம்**<br>கெலன் கெல்லர் | சங்க இலக்கியங்களின் மிடுக்கான மொழிநடையை மாணக்கர் உணருமாறு செய்யுளைப் படித்தலும், அவ்வாறே படிக்கச் செய்தலும், பாடப்பகுதியிலுள்ள புதிய சொற்கள், பிறமொழிச் சொற்கள், இணைச் சொற்களை எடுத்துக்காட்டி அவை போன்றனவற்றைத் தொகுக்கச் செய்தல் ; மாணாக்கர் தாமே மொழிப் பயிற்சிகளை நிறைவு செய்தல். |

| | திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|---|
| | | **இலக்கணம்**<br>தொழிற்பெயர்<br>**மொழித்திறன் பயிற்சி** | |
| 4. | கட்டுரை, கடிதம், விண்ணப்பங்களை உரிய வடிவத்துடனும், நிறுத்தற் குறிகளைப் பயன்படுத்தியும் எழுதுதல் | **இயல் – 4**<br>**செய்யுள்**<br>திருக்குறள், சீட்டுக்கவி<br>**உரைநடை**<br>ஆனந்தரங்கர் நாட்குறிப்பு<br>**துணைப்பாடம்**<br>மு.வரதராசனாரின் கடிதம்<br>**இலக்கணம்**<br>சொல் – பகுபதம், பகாப்பதம்<br>**மொழித்திறன் பயிற்சி** | திருக்குறட்கருத்துகளை உலகியலோடு இணைத்துக் கற்பித்தல் ; உரைநடை, துணைப்பாடம் வழி நிறுத்தக் குறிகளின் தேவையை உணர்த்தி அவ்வாறே படிக்கவும், எழுதவும் செய்தல், கட்டுரை எழுதப் பயிற்றல். |
| 5. | வரலாறு, பண்பாடு அறிதல் | **இயல் – 5**<br>**செய்யுள்**<br>முத்தொள்ளாயிரம், கலிங்கத்துப் பரணி<br>**உரைநடை**<br>உலகளாவிய தமிழர்கள்<br>**துணைப்பாடம்**<br>திரு.வி.க.வின் தமிழ்ப்பணி<br>**இலக்கணம்**<br>வழாநிலை, வழு, வழுவமைதி<br>**மொழித்திறன் பயிற்சி** | இந்த இயலிலுள்ள செய்யுள், உரைநடைப் பகுதிகளின் வழி பண்டைய தமிழரின் பல்வகைப் பண்புகளையும், வீர வரலாற்றையும் எடுத்துக் கூறல். செய்திகள் பலவற்றை மாணாக்கரைத் திரட்டச் செய்தல் ; திரு.வி.க. ஏனைய தமிழ்ச் சான்றோர் பலரின் தமிழ்ப்பணியைத் தொகுக்கச் செய்தல். கட்டுரையாகவும் உரையாடலாகவும் எழுதச் செய்தல். இந்த இயலில் உள்ள இலக்கணப் பகுதிக்கு வழக்கிலுள்ள எடுத்துக்காட்டுகள் தருதல். |
| 6. | பல்துறை அறிவு பெறுதல். (சித்த மருத்துவம், விளையாட்டு, இன்றையஅறிவியல் கண்டுபிடிப்புகள்) புதிய சொற்களின் பொருளறிதல், அகரமுதலியைப் பயன்படுத்த அறிதல், மறுப்புத் திறன் அறிதல் | **இயல் – 6**<br>**செய்யுள்**<br>மணிமேகலை<br>மொழிபெயர்ப்புப் பாடல்கள்<br>**உரைநடை**<br>உணவே மருந்து<br>**துணைப்பாடம்**<br>நோய்நீக்கும் மூலிகைகள் – உரையாடல் | மணிமேகலைப் பாடப்பகுதியின் முன், பின் தொடர்புப் பகுதியைத் தொடர்புபடுத்திக் கற்பித்தல். கவிமணியின் மொழிபெயர்ப்புத் திறன் உணரும் முறையில் பாடப்பகுதியைக் கற்பித்துக் கற்கச் செய்தல் ; மொழி பெயர்க்கும் பயிற்சி அளித்தல். உணவு மருந்தாகும் பாங்கையும் துணைப்பாடத்திலுள்ள மூலிகைகள் சிறப்பினையும் இணைத்துக் காட்டுதல், பாடநூலில் வந்துள்ள செய்யுட் பகுதியிலிருந்து |

| திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| | **இலக்கணம்**<br>பொருள்கோள்<br>**மொழித்திறன் பயிற்சி** | இலக்கணத்தைக் கற்பித்தல். |
| 7. உரையாடல், நாடகம் அமைத்து எழுதுதல். நிகழ்ச்சி அறிவிப்புகளை நிரல்படவும், சுவைபடவும் கூறுதல், எழுதுதல், மனித உறவுத் திறன் அறிதல் | **இயல் – 7**<br>**செய்யுள்**<br>திருக்குறள்,<br>சுரதா பாடல்<br>**உரைநடை**<br>பெருந்தலைவர் காமராசர்<br>**துணைப்பாடம்**<br>சிறுகதை<br>**இலக்கணம்**<br>புணர்ச்சி<br>**மொழித்திறன் பயிற்சி** | குறட்பாக் கருத்தை விளக்கும் கதைகள், உலகியல் நிகழ்வுகள், சான்றோர் வாழ்வியல் நிகழ்வுகள் வழி எடுத்துக் கூறுதல், பெருந்தலைவர் காமராசர் அவர்களின் தொண்டினுக்குப் பிறசான்றுகளைக் கூறி மாணாக்கரையும் அறிந்து தொகுக்கச் செய்தல். இயல்பு, தோன்றல், திரிதல், கெடுதல் – புணர்ச்சிகளைப் பாடநூலிலுள்ள எடுத்துக்காட்டுகள் வழி விளக்குதல் |
| 8. மொழி நயம் அறிதல். (உவமைகள், பழமொழிகள், மரபுத் தொடர்கள், ஒருசொல் பலபொருள், பலபொருள் ஒரு சொல் அறிதல்) | **இயல் – 8**<br>**செய்யுள்**<br>நாட்டுப்புறப்பாடல்,<br>நாமக்கல்லார் பாடல்<br>**உரைநடை**<br>தில்லையாடி வள்ளியம்மை<br>**துணைப்பாடம்**<br>இராணி மங்கம்மாள்<br>**இலக்கணம்**<br>யாப்பு –செய்யுள் உறுப்புகள் – எழுத்து, அசை, சீர், தளை<br>**மொழித்திறன் பயிற்சி** | ஒத்த பிற நாட்டுப்புறப் பாடல்களை ஆசிரியர் கூறி, மாணாக்கரையும் தொகுத்து வரச் செய்தல் இசையுடன் பாடி மாணவரையும் பாடச் செய்தல் ; தில்லையாடி வள்ளியம்மைக்கும், இராணி மங்கம்மாளுக்கும் இருந்த விடுதலை உணர்வினைப் பகுத்துக் காட்டுதல்; சிறு நாடகமாக்கி நடித்துக் காட்டுதல்; யாப்பு பகுதியைப் பயிற்சிகள் பலவற்றின் வாயிலாக மாணாக்கர் உணரச் செய்தல். |
| 9. நயம் பாராட்டுதல், படைப்பாற்றல் | **இயல் – 9**<br>**செய்யுள்**<br>திருவிளையாடற் புராணம் – தருமிக்குப் பொற்கிழியளித்த படலம்<br>மதுரகவி பாஸ்கரதாஸ் பாடல் | புராணக் கதையைத் தொகுத்துரைத்தல். பாத்திரங்கள் வாயிலாகக் கூறச் செய்தல். வானொலி உரைச் சித்திரத்தை நேரடி அனுபவம் வாயிலாகக் கற்கச் செய்தல். ஓர் உரைச் சித்திரம் எழுதக் கற்பித்தல். அடி, தொடை – பகுதிகளைப் பாடப்பகுதி வாயிலாகக் கற்பித்தல், கற்கச் |

| திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
| --- | --- | --- |
| | **உரைநடை**<br>வானொலி உரைச்சித்திரம்<br>**துணைப்பாடம்**<br>சிறுகதை<br>**இலக்கணம்**<br>செய்யுள் உறுப்புகள் – அடி, தொடை<br>**மொழித்திறன் பயிற்சி** | செய்தல். செய்யுட் பகுதிகட்குரிய நயம் உணர்தல். |
| 10. சொற்களஞ்சியம் பெருக்குதல் | **இயல் – 10**<br>**செய்யுள்**<br>பெருஞ்சித்திரனார் பாடல்,<br>கவிஞர் மீராவின் பாடல்<br>**உரைநடை**<br>உயிர்க்கோளம்<br>**துணைப்பாடம்**<br>சிறுகதை<br>**இலக்கணம்**<br>அணி – ஏகதேசம், உருவகம், இல்பொருள், பிறிதுமொழிதல், வேற்றுமை, நிரல்நிறை<br>**மொழித்திறன் பயிற்சி** | இக்காலக் கவிதைகள் – கவிஞர்கள் சிறப்பினை மாணவர் உணருமாறு கற்பித்தல், இவ்வியலிலுள்ள பாடல்களைப் போன்று கருத்தால், நயத்தால், அமைப்பால் ஒத்திருக்கும் பிறபாடல்களைத் தொகுக்கச் செய்தல். உரைநடை, துணைப்பாடம்வழி சொற்களஞ்சியப் பெருக்கத்திற்கு வழிகாட்டல். கற்பித்தல். அனைத்து அணிகளையும் பாடநூலில் வந்துள்ள செய்யுள்களிலிருந்து எடுத்துக்காட்டுடன் தருதல். |

## பத்தாம் வகுப்பு

| திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| 1. உரைப்பகுதியை உரிய ஒலிப்புடன் படித்தல், மையக் கருத்தறிதல், வினா உருவாக்குதல், வினாவிற்கேற்ற விடையளித்தல், குறிப்பெடுத்தல், விவரித்தல், தானேகற்றல், சிந்தனைத் திறன் அறிதல் | **இயல் – 1**<br>**செய்யுள்**<br>வாழ்த்து,<br>திருக்குறள்<br>ஏலாதி<br>**உரைநடை**<br>உயர்தனிச் செம்மொழி<br>**துணைப்பாடம்**<br>பரிதிமாற் கலைஞர்<br>**இலக்கணம்**<br>எழுத்திலக்கணம் – சார்பெழுத்து – ஐகார, ஔகார, ஆய்த, மகரக் குறுக்கங்கள்<br>**மொழித்திறன் பயிற்சி** | திருவாசகத்தின் உருக்கம் உணர்ந்து பாடவும், படிக்கவும் செய்தல்; நயம் உணர்த்துதல். திருக்குறள் மற்றும் ஏலாதி போன்ற நீதி நூல்களின் அறக்கருத்துகளை நிகழ்வுகள், கதைகள், பிற இலக்கியங்கள் வழி மாணாக்கர் மனங்கொளக் கற்பித்தல். தமிழ், தமிழ்ச் சான்றோர் பெருமை புலப்படுமாறு பாடப் பகுதியைத் திறன் வழிக் கற்பித்தல். விதி விளக்குமுறையில் வழி இலக்கணப் பகுதியைக் கற்பித்தல். மாணாக்கர் எடுத்துக்காட்டுகளைத் தொகுக்க வழிகாட்டுதல். |
| 2. மொழி ஆளுமைத் திறன்: விவாதம், கலந்துரையாடல்களில் பங்கேற்று, ஏற்ற இறக்கங்களுடன் பேசுதல், எழுதுதல், மறுப்புத் திறன் அறிதல் | **இயல் – 2**<br>**செய்யுள்**<br>சிலப்பதிகாரம்<br>பாரதிதாசன் பாடல்கள்<br>**உரைநடை**<br>பெரியாரின் பெண்விடுதலைச் சிந்தனைகள்<br>**துணைப்பாடம்**<br>சிறுகதை<br>**இலக்கணம்**<br>சொல் – மூவகைமொழி, வினைமுற்று, வினையெச்சம்<br>**மொழித்திறன் பயிற்சி** | இளங்கோவடிகள் கவித்திறன் புலப்படப் பாடப் பகுதியைக் கற்பித்தல். பாவேந்தரின் தமிழுணர்வு வெளிப்படுமாறு பாடப்பகுதியைக் கற்பித்து – மாணாக்கர் உணரச் செய்தல். பெண்ணியம் பற்றிய பெரியார் சிந்தனையோடு சான்றோர் பலர் சிந்தனைகளை ஒப்பிட்டுக் கற்பித்தல் – கட்டுரை, கவிதை படைக்கத் தூண்டல் ; பட்டிமன்றம், வழக்காடு மன்றம் முதலிய இலக்கியச் சார்புவழி கருத்தூட்டம் தருதல். இலக்கணப் பகுதிகட்குப் பாடநூல்வழி எடுத்துக்காட்டுகள் காண வழிகாட்டுதல். |
| 3. பகுதியைப் படித்துக் கருத்துகளைப் பகுத்தும், தொகுத்தும், வகைப்படுத்தியும், வெளிப்படுத்த அறிதல். புதிய சொற்கள், பிற மொழிச் சொற்கள், இணைச் சொற்கள் அறிதல், | **இயல் – 3**<br>**செய்யுள்**<br>கம்பராமாயணம்<br>**உரைநடை**<br>அண்ணல் அம்பேத்கர் | இராமாயணப் பாடப் பகுதியைத் தொடர்புபடுத்திக் கற்பித்தல், கம்பரின் கவிநயமும், இராமாயணக் காப்பிய நயமும் தோன்றக் கற்பித்தல். உரைநடை மற்றும் துணைப்பாடம்வழித் திறன் பகுதியில் வந்துள்ள |

| | திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|---|
| | மனித உறவுத் திறன் அறிதல் | **துணைப்பாடம்**<br>அன்றாட வாழ்வில் சட்டம்<br>**இலக்கணம்**<br>பொது, குறிப்பு, வெளிப்படை, இனங்குறித்தல்,<br>அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி,<br>உவமை உருவக மாற்றம்<br>**மொழித்திறன் பயிற்சி** | திறன்கள் வரை ஆசிரியர் வழிகாட்டுதல். எதிர்இணை, நேர்இணை, செறிவு இணை – ஆகிய சொற்களை எடுத்துக்காட்டிக் கற்பித்தல்; |
| 4. | கட்டுரை, கடிதம், விண்ணப்பங்களை உரிய வடிவிலும் முறையிலும் நிறுத்தக்குறிகளைப் பயன்படுத்தி எழுதுதல் | **இயல் – 4**<br>**செய்யுள்**<br>புறநானூறு, நற்றிணை<br>**உரைநடை**<br>பேச்சுக்கலை<br>**துணைப்பாடம்**<br>அண்ணாவின் கடிதம்<br>**இலக்கணம்**<br>வினாவகை ,<br>விடைவகை, ஒருபொருட் பன்மொழி.<br>**மொழித்திறன் பயிற்சி** | சங்க இலக்கியப் பாடல்களின் மிடுக்கான நடை, பாடல் உணர்த்தும் பண்டைய தமிழர் சால்புகள், வெளிப்படுமாறு கற்பித்தலும், கற்கச் செய்தலும் ; பேறறிஞர் அண்ணாவின் எழுத்தாற்றல், அறிவாற்றலை எடுத்துக்காட்டிக் கற்பித்தல், சொற்பொழிவாற்றப் பயிற்சியளித்தல். நடைமுறையிலுள்ள எடுத்துக்காட்டுகள் தந்து (ஒரு பொருட் பன்மொழி) கற்பித்தல். |
| 5. | வரலாறு, பண்பாடு அறிதல் | **இயல் – 5**<br>**செய்யுள்**<br>பெரியபுராணம் – அப்பூதியடிகள் புராணம்,<br>**உரைநடை**<br>திரைப்படக்கலை உருவான கதை<br>**துணைப்பாடம்**<br>பாரத ரத்னா எம்.ஜி. இராமச்சந்திரன்<br>**இலக்கணம்**<br>உவம உருபுகள்<br>**மொழித்திறன் பயிற்சி** | பெரியபுராணம் எழுந்த வரலாறு – தொண்டின் சிறப்பு, காப்பியநயம் உணருமாறு கற்பித்தல் ; திரைப்படத்தின் தோற்றம் – வளர்ச்சி – வரலாறு அறியுமாறு கற்பித்தல், துணைப்பாடத்தை இணைத்துக் கற்பித்தல் ; இலக்கணத்திற்கான பகுதியை விதி விளக்கமுறையில் கற்பித்தல். |

| திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
| --- | --- | --- |
| 6. உரையாடல், நாடகம் அமைத்து எழுதுதல். நிகழ்ச்சி அறிவிப்புகளை நிரல்படவும், சுவைபடவும் கூறுதல், எழுதுதல் | **இயல் – 6**<br>**செய்யுள்**<br>தமிழ்விடு தூது<br>**உரைநடை**<br>தொன்மைத் தமிழகம்<br>**துணைப்பாடம்**<br>தற்காலத் தொல்லியல் ஆய்வுகள்(உரையாடல்)<br>**இலக்கணம்**<br>புணர்ச்சி, இயல்பு, விகாரம், திசைப்பெயர், பண்புப்பெயர்<br>**மொழித்திறன் பயிற்சி** | செய்யுட்குரிய ஓசையோடும் – இசையோடும் கற்பித்தல், கற்கச் செய்தல், நயம் உணர்த்தல், தமிழகத்தின் தொன்மையை விளக்கும் உரைநடை, துணைப்பாடம்வழிக் கற்பிப்பதோடு பிறசான்றுகளோடும் இணைத்துக் கற்பித்தல் ; துணைப்பாடச் செய்திகளை உரையாடல், நாடகம் வடிவமைக்கப் பயிற்றுதல். செய்யுட் பகுதியோடு இணைத்துப் புணர்ச்சி இலக்கணம் கற்பித்தல். |
| 7. மொழி நயம் அறிதல். (உவமைகள், பழமொழிகள், மரபுத் தொடர்கள், ஒருசொல் பலபொருள், பலபொருள் ஒரு சொல் அறிதல்) | **இயல் – 7**<br>**செய்யுள்**<br>திருக்குறள்<br>தேவாரம்<br>**உரைநடை**<br>தமிழ்மொழியில் அறிவியல் சிந்தனைகள்<br>**துணைப்பாடம்**<br>சிறுகதை<br>**இலக்கணம்**<br>பொருள் – அகம்<br>**மொழித்திறன் பயிற்சி** | திருக்குறள் தரும் அறநெறிக்கும் ஊறுநேரா வண்ணம் ஏற்ற உவமைத் தொடர்கள், பழமொழிகள், மரபுத் தொடர்கள் கூறுதல்; கூறச் செய்தல், தேவாரப் பாடலுக்கு உரிய இசையோடும் இசைவு தோன்றவும் கற்பித்தல்; உரைநடை வழி அறிவியல் கலைச் சொற்கள் அறியச் செய்தல், மொழிப் பயிற்சிகளை முறையாக நிறைவேற்ற ஆசிரியர் வழிகாட்டல். |
| 8. பல்துறை அறிவு பெறுதல். (சித்த மருத்துவம், விளையாட்டு, இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் ...) புதிய சொற்களின் பொருளறிதல், அகரமுதலியைப் பயன்படுத்த அறிதல் | **இயல் – 8**<br>**செய்யுள்**<br>சீறாப் புராணம்<br>**உரைநடை**<br>காந்தியம்<br>**துணைப்பாடம்**<br>சிறுகதை | சீறாப்புராணக் கருத்துகளை இசுலாம் நெறிக்கு ஏற்பக் கற்பித்தல், உரிய பொருளறிய அகராதி காணும் பயிற்சி அளித்தல்; அண்ணல் காந்தியடிகளின் நாட்டுணர்வு வெளிப்படுமாறு கற்பிப்பதோடு காந்தியக் கொள்கைகளின் சிறப்பினையும் கற்பித்தல் – உரைநடை காட்டும் சொற்றொடர் வகை அறியச் செய்தல். |

| திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| | **இலக்கணம்**<br>பொருள் – புறம்<br>**மொழித்திறன் பயிற்சி** | |
| 9. சொற்களஞ்சியம் பெருக்குதல், மனித உறவுத் திறன் அறிதல் | **இயல் – 9**<br>**செய்யுள்**<br>கலித்தொகை<br>நந்திக்கலம்பகம்<br>நலாயிரத் திவ்வியப் பிரபந்தம்<br>**உரைநடை**<br>திருவருட்பிரகாச வள்ளலார்<br>**துணைப்பாடம்**<br>அயோத்திதாசப் பண்டிதர்<br>**இலக்கணம்**<br>பா வகைகள்<br>**மொழித்திறன் பயிற்சி** | சங்க இலக்கியப் பெருமை புலப்படக் கலித்தொகையைக் கொண்டு கற்ப்பித்தல், சிற்றிலக்கியச் செழுமை வெளிப்பட நந்திக் கலம்பகத்தை மையமாகக் கொண்டு கற்பித்தல்; குலசேகர ஆழ்வாரின் பக்தியை உணர செய்தல், இப்பகுதியிலுள்ள செய்யுள், உரைநடைகள் வழி, சொற்களஞ்சியப் பெருக்கப் பயிற்சி அளித்தல்.<br>உரைநடை வழி மனித நேய உணர்வு பெறச் செய்தல்.அயோத்திதாசப் பண்டிதரின் சீர்திருத்த உள்ளம் புலப்படச் சான்றுகள் தந்து கற்பித்தல்,<br>இலக்கணப்பகுதிக்கான எடுத்துக்காட்டுகளைப் பாடநூலிலிருந்து எடுத்துக்காட்டிக் கற்பித்தல். |
| 10. நயம் பாராட்டுதல், படைப்பாற்றல் | **இயல் – 10**<br>**செய்யுள்**<br>சாலை. இளந்திரையன் பாடல்<br>**உரைநடை**<br>பல்துறை வேலைவாய்ப்புகள்<br>**துணைப்பாடம்**<br>நூலகம்<br>**இலக்கணம்**<br>அணி : தற்குறிப்பேற்றம், வஞ்சப்புகழ்ச்சி, இரட்டுறமொழிதல், செம்மொழிசிலேடை, பிரிமொழிச் சிலேடை, பின்வருநிலை, பிறிதுமொழிதல்<br>**மொழித்திறன் பயிற்சி** | இப்பகுதியிலுள்ள செய்யுளோடு இதுவரை கண்ட செய்யுட் பகுதிகளையும் நினைவு கூர்ந்து நயம் பாராட்டக் கற்பித்தல், கதை, கட்டுரை, சிறுகவிதை, சிறுகதை படைக்கப் பயிற்சி அளித்தல். நூலகத்தைக் கையாளும் திறனைப் பயிற்றல்.<br><br>பாடநூலிலுள்ள அணிகளுக்குரிய மேற்கோள்களைப் பாடநூலில் வந்துள்ள செய்யுட் பகுதிகளிலிருந்து எடுத்துக்காட்டிக் கற்பித்தல். |